Registered as a Newspaper

பக்கங்கள் 16+8

விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 38
கதிர் : 267

ஞாயிற்றுக்கிழமை 20 ஓகஸ்ட் 2023

ஆவணி 03 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

குருந்தூர்மலை ஆதிசிவனுக்கு

# பூர்வீகப் பகுதியிலேயே ஆலயத்தை அமைப்போம்



## அதனைக் குழப்ப அரச கைக்கூலி சச்சிதானந்தம் சதி செய்கின்றார்

**ரவிகரன் ஆவேசம்**

**முல்லைத்தீவு, ஓகஸ்ட் 20**

**குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனாருக்கு பூர்வீக இடத்திலேயே ஆலயம் அமைக்கப்படும். இந்த விடயத்துக்குள் மறவன்புலவு சச்சிதானந்தம் தரப்பினர் தலையிட்டு, எம் போராட்டத்தை நீர்த்துப்போகச் செய்ய வேண்டாம். அரச கைக்கூலிகளுக்கு இதில் இடமில்லை என்று வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆவேசமாகத் தெரிவித்தார்.**

»13

ஈழத்தமிழ்த் திரை வரலாற்றில் சாதனை

## தூவானம் 100

யாழ்., ஓக. 20
தூவானம் திரைப் படத்தின் 100 ஆவது »15

## சஜித் - டலஸ் புதிய கூட்டணி

கொழும்பு, ஓக. 20
சஜித் பிரேமதாஸ தலைமையி »15

## அடுத்த வருடத்தில் தேர்தல் நிச்சயம்!

கொழும்பு, ஓக. 20
அடுத்த வருடம் நிச்சயமாக »15

## நல்லிணக்கத்தை ஏற்படுத்தவே முயற்சிக்கிறதாம் அரசாங்கம்!

புத்தசாசன அமைச்சர் விதுர தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 20
நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவே அரசாங்கம் முயற்சிக்கின்றது. குருந்தூர்மலையில் இடம்பெறும் விவகாரங்கள் தொல்பொருள் விடயமா? அல்லது அரசியலா? என்று கேள்வி »03

## செம்மணியில் கோரவிபத்து! கணவன் பலி: மனைவி காயம்

யாழ்ப்பாணம், ஓக. 20
பொலிஸாரின் தண்ணீர் பவுஸரும், மோட்டார் சைக்கிளும் நேற்று ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இளம் குடும்பத் தலைவர் உயிரிழந்தார். »13

## குடும்பத்தலைவர் மயங்கிச் சாவு!

யாழ்., ஓக. 20
யாழ்ப்பாணம் - சங்கானைப் பகுதியைச் சேர்ந்த »15

தீர்வு விடயத்தில்

## ஒற்றையாட்சிக்கு எதிரான திட்டங்களை எதிர்ப்போம்

நாமல் தெரிவிப்பு »03

## தேசியப் பாதுகாப்பு விரைவில் மீளாய்வு

கொழும்பு, ஓக. 20
நாட்டின் தேசியப் பாதுகாப்புத் தொடர்பான மீளாய்வொன்று விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது. இதன்போது, பொருளாதாரப் போக்குகள், காலநிலை மாற்றம் உள்ளிட்ட »14

## கடற்புலிகள் திறமைசாலிகள்!


கடற்படையினர் முன்பாக ரணில் ஒப்புதல்

கொழும்பு, ஓக. 20
கடற்புலிகள் திறமைசாலிகள். அந்த அமைப்பு படகுகளை வைத்துத் தன் திறமையை வெளிப்படுத்தியது - இவ்வாறு ஜனாதிபதி ரணில் »14

கணிதப் பிரிவில் முதலிடம்பெற்ற

## பல்கலை மாணவன் நேற்று உயிர்மாய்ப்பு

கிளிநொச்சியில் சோகம்



கிளிநொச்சி, ஓக. 20
மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும், கிளிநொச்சி விவேகானந்தா நகரைச் சேர்ந்த மேனன் தேனுஜன் (வயது-21) நேற்றையதினம் தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட் »03

# சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடத்திவரப்பட்ட கஞ்சா வடமராட்சிக் கடலில் மீட்பு

### சந்தேகநபரொருவரும் கைது

யாழ்ப்பாணம், ஓக.20

வடமராட்சி கிழக்கு முள்ளியான் கடற்பரப்புக்கு கடத்திவரப்பட்ட ஒரு தொகை கஞ்சாவுடன் ஒருவர் கடற்படையினரால் நேற்றுச் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 61 பொதிகளில் அடைக்கப்பட்டு எடுத்துவரப்பட்ட 130 கிலோ எடையுள்ள கஞ்சா மீட்கப்பட்டதுடன் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட படகும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபரை சட்டநடவடிக்கைக்குட்படுத்த சான்றுப்பொருள்களுடன் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனக் கடற்படையினர் தெரிவித்தனர். (ச-100)

### மருத்துவ நிபுணர்கள் வெளியேறுவதால்

# சிறார்களுக்கான இருதயநோய் சிகிச்சைகளும் சிக்கலில்!

கொழும்பு, ஓக.20

**நாட்டிலிருந்து மருத்துவர்கள் வெளியேறுகின்றமை, போதிய மருத்துவர்கள் இன்மை போன்றவற்றுக்கு மத்தியில் குழந்தைகளுக்கான இருதயநோய் நிபுணர்கள் 6 பேர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. இதனால் குழந்தைகளுக்கான இருதய சிகிச்சை சேவைகள் கேள்விக்குறியாகியுள்ளன.**

நாட்டில் மருத்துவத்துறையில் முழுத் தகுதிபெற்ற குழந்தைகளுக்கான இருதயநோய் நிபுணர்களின் நிலையான எண்ணிக்கை 20 ஆக இருக்கவேண்டும். தற்போதைய எண்ணிக்கை பதினொன்றாக மட்டுமே இருந்தது. அவர்களில் ஆறு பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

தற்போது, கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனை, சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் மருத்துவமனை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் குருநாகல் போதனா மருத்துவமனை ஆகியவற்றில் முழுத் தகுதியுள்ள ஐந்து குழந்தைகளுக்கான இருதயநோய் மருத்துவ நிபுணர்கள் மட்டுமே உள்ளனர்.

இந்த மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறையானது மேலதிக சிகிச்சைக்காக லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக அனுப்பப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு வழிவகுத்துள்ளது. லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் உள்ள நான்கு குழந்தை இருதய நோய் மருத்துவ நிபுணர்களில், இருவர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்கள். அதனால் இருதய சிகிச்சை சேவைகளை நிர்வகிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

சுகாதார அதிகாரிகளின் கூற்றுப்படி, இந்த விடயத்தை முழுமையாக ஒழுங்குபடுத்த இன்னும் மூன்று ஆண்டுகள் ஆகும் என தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)

# தேருநர் பதிவேட்டு விவரத்தை சரி பார்க்குமாறு அறிவுறுத்து!

கொழும்பு, ஓக.20

தகுதியான வாக்காளர்கள் 2023 தேருநர் பதிவேட்டில் தமது பெயர் உள்ளதா என்று உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு பொதுமக்களை வலியுறுத்தியுள்ளது.

எவரும் www.elections.gov.lk இணையத்தளத்துக்குச் சென்று விவரங்களைச் சரிபார்க்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல்களைச் சரிபார்க்க தனிநபர்கள் தங்கள் தேசிய அடையாள அட்டை எண்ணைப் பயன்படுத்த வேண்டும். தேருநர் பதிவேட்டில் இருந்து தகுதியான வாக்காளர்கள் யாரேனும் விடுபட்டிருந்தால், எதிர்வரும் செப்ரெம்பர் 4 ஆம் திகதிக்குள் கிராம நிர்வாக அலுவலரைத் தொடர்பு கொள்ளவேண்டும்.

2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் பிறந்தவர்கள் 18 வயது நிரம்பியவர்கள், 2023 ஆம் ஆண்டில் தங்கள் வழக்கமான குடியிருப்பு முகவரியில் வாக்காளராகப் பதிவு செய்யத் தகுதியுடையவர்கள் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (எ-இ)

# அரசின் தந்திரோபாயத்துக்கு உதவும் மறவன்புலவு சச்சி

### அம்பிகா சற்குணநாதன் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.20

குருந்தூர்மலையை அடிப்படையாக வைத்து அரசாங்கம் முன்னெடுக்கும் தந்திரோபாயத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மறவன்புலவு சச்சிதானந்தன் உதவுகின்றார் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார். அவர் ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

குருந்தூர்மலையில் இடம்பெறுவது தனியான ஒரு சம்பவமல்ல. வடக்கு, கிழக்கின் குடிசனப்பரம்பலை மாற்றுவது நாடாளுமன்றத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பது உட்பட பல நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான ஒரு நீண்டகால தந்திரோபாயமே அரசாங்கத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படுகின்றது. இதற்காக தொல்பொருள்திணைக்களம், இராணுவம், பௌத்தமதகுருமார்கள் போன்றவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

இந்து வலதுசாரி அமைப்பான சிவசேனையின் மறவன்புலவு சச்சிதானந்தன் போன்றவர்கள் அரசாங்கத்தின் இந்த மூலோபாயத்தை வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் முன்னெடுக்கின்றனர்.

இந்தக் குழுக்களுக்கு ஆதரவளித்து கிறிஸ்தவர்கள், முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துகளை வெளியிடும் தமிழர்கள் இதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

இந்த விடயம் தொடர்பான கரிசனையற்றவர்கள் பௌத்த மதகுருமார் நீதிமன்ற உத்தரவை மீறியுள்ளதையும் அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததையும் கருத்தில்கொள்ளவேண்டும். இது நீதித்துறையின் அதிகாரத்தை குறைமதிப்புக்கு உட்படுத்தும். செயற்படாத நீதி அமைப்பை மேலும் பலவீனப்படுத்தும் ஒரு செயலாகும் - என்றார். (எ-இ)



# வடமுனை தபால்பெட்டி அழகுபடுத்த அடிக்கல்

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் தபால் பெட்டிகளை அழகுபடுத்தும் வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் நான்கு முனைகளிலும் தபால் திணைக்களத்தால் விசேட தபால் பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை அழகுபடுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் பருத்தித்துறை அஞ்சல் அலுவலக எல்லைக்குள் உள்ள வடமுனை தபால் பெட்டியை அழகுபடுத்த நேற்றுமுன்தினம் அத்திபாரம் இடப்பட்டுள்ளது. (ச-இ)

# வாடகை வாகனங்களை விற்றவர்கள் கைது!

வாடகைக்கு வாகனங்களைப் பெற்று போலி ஆவணங்களைத் தயாரித்து விற்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாணந்துறையில் ஒருவர் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மூவரைக் கைதுசெய்துள்ளனர்.

36 வயதுடைய பெண் ஒருவரும், 36 மற்றும் 46 வயதுடைய இரு ஆண்களுமே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பாணந்துறை நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பாணந்துறை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-இ)


# காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோயில் முன்பாக 51 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

* கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்.
* நகுலேஸ்வரர் மகாவித்தியாலயத்தில் இருந்து 250 m மீற்றர் தூரம். நகுலேஸ்வரர் ஆலயம் 50 m மீற்றர் தூரம். பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m மீற்றர் தூரம்.
* செம்மண்கான் நன்னீர் ஊற்றுநிலம். வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம். நல்ல சூழல்.
* 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன். நிலப்பரப்பு

பார்வையிடும் நேரம் :-

காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை



தொடர்பு:- குரு

077 8743 204, 077 2880 152, 077 076 0389


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# '13' க்கு எதிர்ப்பு வெளியிட பெரமுனவுக்கு தகுதியில்லை

## நிமால் லான்சா எம்.பி. காட்டம்



**கொழும்பு, ஓக. 20**

**அதிகாரப்பகிர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கு இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டுள்ள பொதுஜன பெரமுனவுக்கு தார்மீக உரிமையில்லை. அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு அதிகாரம் பகிரப்பட்டு சர்வதேச நம்பிக்கை கட்டியெழுப்பப்படவேண்டும்.**

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் லான்சா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

13க்கு அப்பால் அதிகாரப் பகிர்வு பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் அதிகாரங்களைப் பகிரக்கூடாதென பெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரியவசமும் இரட்டை நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றனர்.

13ஆவது திருத்தம் தற்போதும் அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் அனைத்து அரசியல் கட்சிகளினதும் கருத்துகளைப் பெற்று நாட்டின் அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரப் பகிர்வுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு அதிகாரப் பகிர்வை வழங்குவதன் மூலம் சர்வதேச நம்பிக்கையையும் கட்டியெழுப்ப முடியும்.

நாட்டில் பொருளாதார, சமூக, அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்துள்ள நடவடிக்கைக்கு கட்சிக்குள் புரிந்துணர்வற்ற பெரமுன எதிர்ப்பை வெளிப்படுத்த தகுதியில்லை - என்றார். (ச-இ)



## 22ஆம் திகதி கூடுகிறது நாடாளுமன்றம்

கொழும்பு, ஓக.20

எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 25ஆம் திகதிவரை நாடாளுமன்றம் கூடவுள்ளது. அண்மையில் நடந்த நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுக் கூட்டத்தில் இந்த விடயம் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

22ஆம் திகதி தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பாக விவாதிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் பெறப்படவுள்ளன.

எதிர்வரும் 23ஆம் திகதி இறக்குமதி மற்றும் ஏற்றுமதிச் சட்டம் மற்றும் கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டம் தொடர்பாக விவாதிக்கப்படவுள்ளன.

24ஆம் திகதி அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டம் தொடர்பாகவும், ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் தொடர்பாக எதிர்க்கட்சிகள் கொண்டுவரும் சபை ஒத்துவைப்புவேளை விவாதம் என்பன நடைபெறும் என்று நாடாளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஏ-இ)

# உள்ளூராட்சிமன்றங்களில் இளைஞர்களுக்கு 25 வீதம்!

## சட்டவரைவு விரைவில் தொலவத்த எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 20

உள்ளூராட்சிமன்றங்களில் 25 சதவீத இளைஞர் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் சட்டவரைவொன்று தயாரிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி. தொலவத்த தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனை அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்குவதும், தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் இளைஞர் பிரதிநிதித்துவத்துக்கான வாய்ப்புகளை வழங்குவதும் ஜனாதிபதியின் வேலைத்திட்டம்.

நாடாளுமன்றத்தில் இளைஞர் பிரதிநிதித்துவம் பற்றி நாம் பேசினாலும், அவர்களுக்கு அந்த வாய்ப்புக் கிடைப்பதைக் காண முடியவில்லை. இளைஞர்களுக்கு 25சதவீதமானவேட்புமனுக்களைத் தாக்கல்செய்யும் உரிமையை வழங்கும் வகையில் உள்ளூராட்சிமன்ற சட்டத்தில் திருத்தம் செய்யப்படுவதோடு அவர்களுக்குரிய உரிமையை மீளப் பெற்றுக்கொடுப்பதற்காகவே இந்தப் பிரேரணை முன்வைக்கப்படுகிறது.

இளைஞர் பிரதிநிதித்துவச் சட்டம், அமைச்சரவையில் இரண்டு முறை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இளைஞர் தினத்தையொட்டி, அடுத்த நாடாளுமன்ற அமர்வில் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை 25வீதமாக அதிகரிப்பதற்கான சட்டவரைபு மீண்டும் சமர்ப்பித்து நிறைவேற்றப்படும். இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகளை கொடுத்து நாட்டை சிறந்த முறையில் கட்டியெழுப்ப வழிவகை செய்யப்படும்- என்றார். (ச-இ)

# ஓய்வுபெற்ற விசேட மருத்துவர்களை மீளச் சேவையில் இணைக்கத் திட்டம்!

ஓய்வுபெற்ற விசேட மருத்துவர்கள் மீண்டும் சேவைக்குத் திரும்புவார்களாயின் அவர்களுக்கு சகல வசதிகளையும் வழங்குவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பில் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஜி. விஜேசூரிய தெரிவித்துள்ளதாவது

நாட்டில் விசேட மருத்துவர்களுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஓய்வுபெற்ற விசேட மருத்துவர்கள் மீண்டும் சேவைக்குத் திரும்புவார்களாயின் அவர்களுக்கு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

தூரப்பிரதேசங்களில் பணியாற்றும் மருத்துவர்களுக்கான உத்தியோக பூர்வ வாசஸ்தலம் மருத்துவமனைகளிலேயே வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மருத்துவமனைகளில் மருத்துவர்களுக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தலம் இல்லாத இடங்களில் வாடகை அடிப்படையிலேனும் வழங்கப்படும்.

அதேவேளை வெளிநாட்டு மருத்துவர்கள் நாட்டுக்கு வரவழைக்கப்படுவர் என வெளியாகும் தகவல் உண்மைக்குப் புறம்பானது. அவ்வாறான எந்தவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை- என்றார். (ச-இ)

## பல்கலை...

டுள்ளார். முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில், அந்த மாணவன் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மாணவனின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. குறித்த மாணவன் க.பொ.த. உயர்தரத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் முதல்நிலை சித்தியைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-113,125)

## ஒற்றையாட்சிக்கு...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒற்றையாட்சிக்கு எதிரான ஏதேனும் திட்டத்தை அமுல்படுத்த முற்பட்டால் அதனை பொதுஜன பெரமுன கட்சி கடுமையாக எதிர்க்கும் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற மக்கள் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைக்கும், எமது கொள்கைக்கும் இடையில் சிற்சில பிரச்சினைகள் இருக்கலாம். அவற்றை பேச்சு மூலம் தீர்க்க முற்படுவோம். ஏதேனும் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்த முற்பட்டால், அது இந்தநாட்டு ஒற்றையாட்சிக்கு எதிரானதெனில் அதற்கு எதிராக செயற்படுவதற்கு பொதுஜன பெரமுன பின்நிற்காது - என்றார். (அ-ம-44)

## நல்லிணக்கத்தை...

எழுப்பியுள்ளார் புத்தசாசன அமைச்சர் விதுர விக்ரமநாயக்க. திருகோணமலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது நாட்டுக்கு சுற்றுலாத்துறை மூலமே பெரியளவில் அந்நியச் செலாவணி கிடைக்கப்பெறுகிறது. நாட்டில் உள்ள தொல்பொருள் மரபுகளை பார்வையிடவே சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். நீண்டகாலமாக இந்த மரபுரிமைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை. இதன் காரணமாக பண்டைய காலங்களில் உருவாக்கப்பட்ட இவை தற்போது சிதைவடைந்து செல்கின்றன.

இந்தநிலையில் மரபுரிமைகளைப் பாதுகாத்து, அவற்றுக்குப் புத்துயிர்ப்பளித்து மக்களிடத்தில் கையளிக்க வேண்டும். மேலும் இவற்றைச் சூழவுள்ள பகுதிகளையும், வாழும் மக்களின் தேவைகளையும் ஆராய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். திருகோணமலையிலும் பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இது தொடர்பிலான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

குருந்தூர்மலை தொடர்பில் தற்போது பிரச்சினைகள் எழுந்துள்ளன. இந்த விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் இனங்களுக்கு இடையில் இன முரண்பாட்டை தோற்றுவிக்க ஒரு தரப்பினர் முயற்சிக்கின்றனர். இங்கு தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகள் உண்மையில் தொல்பொருள் தொடர்பிலான பிரச்சினையா? அல்லது அரசியல் ரீதியிலான பிரச்சினையா? என உங்களிடம் வினவுகிறேன்.

நாட்டில் இவ்வாறான பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு இனங்களுக்கும், சமயங்களுக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய தேவை கிடையாது. 30 வருட காலமாக இடம்பெற்ற போர் காரணமாக நாம் பல்வேறு துன்பங்களை அனுபவித்தோம். அவ்வாறானதொரு இருளான, கறைபடிந்த யுகத்தை எதிர்காலத்தில் எமது பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்துவிடக்கூடாது. நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவே நாங்கள் முயற்சிக்கிறோம். இங்கு வாழும் அனைத்து சமூகங்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நாட்டை நல்ல முறையில் வழிநடத்திச் செல்லவே எதிர்பார்க்கிறோம். அதற்கான சகல விடயங்களையும் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வோம் - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி சுந்தரலிங்கம்

### (செல்வம்ஸ் பற்றி சேல்ஸ் உரிமையாளர்)



தோற்றம் 26.02.1953 — மறைவு 17.08.2023

பாடசாலை வீதி, தாவடி தெற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுந்தரலிங்கம் (காந்தி) கடந்த (17.08.2023) வியாழக்கிழமை அன்று அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சீவரட்ணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குணரத்தினம் பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், சுஜனின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம், செல்வநாயகி, செல்லத்துரை, மகேந்திரன் மற்றும் செல்வநாயகம், செல்வராணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற நவரட்ணராஜா மற்றும் றஞ்சிதாதேவி, நடராஜா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 771 2222

(cs.51727) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DP AVIATION
David Pieris Aviation (Pvt.) Ltd.

## 70 நிமிடங்களில் யாழ்பாணத்திற்கு பறந்திடுங்கள்






நம்பமுடியாத ஆறிமுக விலை

ஒரு வழி 22,000

இரு வழி 41,500

எங்களின் நவீன குளிரூட்டப்பட்ட செஸ்னா 208 கிராண்ட் கேரவன் எக்ஸிகியூட்டிவ் வசதியில் விரைவாகவும் பாதுகாப்பாகவும் பயணிக்கலாம்

| தினம் / நாள் | இரத்மலானையிலிருந்து வெளியேறுதல் | யாழ்ப்பாணத்தைச் சென்றடைதல் | யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறுதல் | இரத்மலானையைச் சென்றடைதல் |
|---|---|---|---|---|
| சனிக்கிழமை | 0800 Hrs. | 0910 Hrs. | 0940 Hrs. | 1050 Hrs. |
| ஞாயிற்றுக்கிழமை | 1500 Hrs. | 1610 Hrs. | 1640 Hrs. | 17[illegible]0 Hrs. |
| செவ்வாய்க்கிழமை | 0800 Hrs. | 0910 Hrs. | 0940 Hrs. | 1050 Hrs. |
| வியாழக்கிழமை | 0800 Hrs. | 0910 Hrs. | 0940 Hrs. | 1050 Hrs. |

கொண்டு செல்லக்கூடிய பொதியின் அளவு 7kg. மேலதிக பயண பொதிகளை கொண்டுசெல்ல PPT Travels யுடன் தொடர்பு கொள்ளவும்

0770 555 444 | அல்லது PPT TRAVELS ஐத் தொடர்புகொள்ளவும்

கொழும்பு 06 - இல. 296 A1, காலி வீதி, வெள்ளவத்தை - 077 57 55 175 | 011 23 64 999
கொழும்பு 13 - இல. 153, ஆட்டுப்பட்டித்தெரு - 076 44 08 954 | 011 23 20 336
யாழ்ப்பாணம் - இல. 183, கே.கே. எஸ். வீதி யாழ்ப்பாணம் - 077 57 31 318 | 021 22 28 829
பருத்தித்துறை - அரசடி வீதி, பருத்தித்துறை - 077 57 36 003 | 021 22 65 336
திருமுறுகண்டி - A9 வீதி, திருமுறுகண்டி - 076 44 08 952 | 021 22 84 829

நிபந்தனைகளுக்குட்பட்டது — DP ஏவியேஷன் சார்பாக ஃபிட்ஸ்ஏர் (FitsAir) இனால் விமானங்கள் இயக்கப்படும்


## மருத்துவ அதிகாரிக்கு கட்டாய விடுமுறை

கொழும்பு, ஓக.20 சர்ச்சைக்குரிய பல உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொண்டமைக்காகப் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள கொழும்பு சட்ட மருத்துவ அதிகாரி ரூஹுல் ஹக்கைக் கட்டாய விடுமுறையில் அனுப்ப சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கொழும்பு ரிஷ்வே மருத்துவமனையில் சிறுநீரக சத்திர சிகிச்சையின் பின்னர் உயிரிழந்த 3 வயதுச் சிறுவனின் உடற்கூற்றுப் பரிசோதனை, வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் உடற்கூற்றுப் பரிசோதனை ஆகியவற்றை இவர் மேற்கொண்டிருந்தார்.

இலங்கை மருத்துவசபையால் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில், இவர் இந்த உடற்கூற்றுப் பரிசோதனைகளை முன்னெடுத்திருந்தார் என்று கூறப்படுகின்றது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் இவர் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டார் என்று இலங்கை மருத்துவசபையின் தலைவர் பேராசிரியர் வஜிர திசாநாயக்க தெரிவித்தார்.

(ஏ-இ)


## விற்பனை

உயர் மதிப்புள்ள சொத்துக்கள்,
உயர் மதிப்புள்ள இடம்,
காலி வீதியின் முகப்பில்,
தெஹிவளை - கல்கிசை

30 + 37 = 67 பேர்ச்சஸ் அருகாமையில், மொத்தம் 14,619 சதுர அடியில் 04 வணிக / சொகுசு குடியிருப்பு வீடு வகையிலான கட்டிட வளாகம். முழுமையாக குளிரூட்டப்பட்டது மற்றும் முழுமையாக டைல்ஸ் பதிக்கப்பட்டது. அலங்கரிக்கப்பட்ட நடைபாதை. உயரமான எல்லை சுவர்கள் மற்றும் சிசிடிவி. தானியங்கி பரிமாற்ற சுவிட்சுகள் கொண்ட 100 KVA பவர் ஜெனரேட்டருடன் கூடுதலாக அனைத்து வசதிகளும் உள்ளன. கணனிகளுக்கான வயர்கள் முழுமையாக பொருத்தப்பட்டுள்ளது. 16 வாகன தரப்பிட வசதி. காலி வீதியினூடாக நுழைவு / வெளியேறல் அத்துடன் சில்வெஸ்டர் வீதிக்கு இரண்டு நுழைவு வாயில்கள் உள்ளன. முழுமையான உரிமை. பல நோக்கங்களுக்கு ஏற்றது. எதிர்காலத்தில் உயர் மதிப்பை கொண்டது. முழு நிலப்பரப்பிலும் அரிய வகையான நிலம்! அனைத்து வசதிகளும் கைவசம்.

37 பேர்ச்சஸ் ரூபா. 07 M (Per Perch)
30 பேர்ச்சஸ் ரூபா. 09 M (Per Perch)
(விலை பேசித்தீர்மானிக்கலாம்)

ஒவ்வொரு தொகுதியின் விற்பனை, அதாவது 30P 02 நவீன வீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது, 37P 02 வீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

சொத்தை பார்வையிடல் அவசியம் !

தரகர்கள் தேவையில்லை. புகைப்படங்கள் இல்லை, ஏனென்றால் சொத்துக்களின் மதிப்பு மற்றும் திறனை உணர ஒருவர் அவசியம் பார்வையிட வேண்டும்.

கூட்டுக்குடும்பத்திற்கு உகந்தது

தொடர்புகளுக்கு: 0777 760 599 Delantha



medicare 2023 JAFFNA

## குழந்தை இல்லை என்ற குறை இனி இல்லை



A4 FERTILITY CENTRE

யாழ்ப்பாணம் மருத்துவ கண்காட்சி

வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் | STALL AP1 & AP2 | மு.ப.10.00 முதல் இரவு 7.00 வரை

2023 செப்டெம்பர் 08 09 10



தென்னிந்தியாவிலிருந்து வருகை தரும்
டாக்டர். அருணா அசோக்
MBBS, MS - Obstetrics & Gynaecology,
DNB - Obstetrics & Gynaecology - Infertility Specialist
Clinical Director - A4 Fertility Hospitals and Fertility Care
Chennai, South India

உங்கள் குழந்தையில்லா பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளை மருத்துவரிடம் கேட்டு பயன்பெறுங்கள்

முன்பதிவுகளுக்கு: 0777 307212

இக்கண்காட்சியில் பங்குபற்றுபவர்களுக்கு மாத்திரம்
Airport Pick & Drop, 45 நாட்கள் தங்குமிட வசதி இலவசம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உக்ரைன் செல்லும் அமெரிக்க 'எப்-16'

நியூயோர்க், ஓக.20
டென்மார்க் மற்றும் நெதர்லாந்தில் உள்ள அமெரிக்கத் தயாரிப்பான 'எப்-16' போர் விமானங்களை உக்ரைனுக்கு வழங்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது. இந்தப் போர் விமானங்களை இயக்கு வதற்கான முழுமையான பயிற்சிகளை உக்ரைன் விமானிகள் பெற்றபின்னர் போர் விமானங்கள் உக்ரைனுக்கு வழங் கப்படவுள்ளன.
உக்ரைன் ரஷ்யாவுக்கு எதிரான போரில் 'எப்-16' போர் விமானங்களை இணைப் பதற்குச் சில மாதங்கள் ஆகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.
நெதர்லாந்தில் சுமார் 24 'எப்-16' போர் விமா னங்கள் உள்ளன. டென்மார்க் தங்களி டம் உள்ள 30 'எப்-16' போர் விமானங் களை மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளது. (எ)

# தமிழக முருகன் அமெரிக்காவில்

சென்னை, ஓக.20
தமிழ்நாட்டிலிருந்து 23 ஆண்டு களுக்கு முன்னர் காணாமற் போன பல்லவர் காலத்து முருகன் சிலை அமெரிக்காவில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த இந் தச் சிலை தமிழ்நாட்டின் கள்ளக் குறிச்சி, தச்சூர் சிவன்கோயிலில் இருந்த போது காணாமற்போயிருந்தது.
இந்தச் சிலை தொடர்பாக விசாரணை களை முன்னெடுத்து வந்த தமிழக சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு இந்தச் சிலை தற்போது அமெரிக்காவில் உள்ள செக்கியூரிட்டி என்ற நிறுவ னத்திடம் உள்ளது என்று கண்டு பிடித்துள்ளனர்.
இந்தியா மற்றும் அமெரிக்கா இடை யிலான பரஸ்பர சட்ட உதவி ஒப்பந்த அடிப்படையில் முருகன் சிலையை தமிழ்நாட்டுக்கு மீண்டும் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# 11 நாள்கள் சவப்பெட்டிக்குள் போராடி உயிரிழந்த பெண்!

*பிரேஸிலில் அதிர்ச்சிச் சம்பவம்*

பிரேஸிலா, ஓக.20
பிரேஸிலில் இறந்துவிட்டார் என்று கருதி உயிருடன் சவப்பெட்டியில் அடக்கம் செய்யப்பட்ட பெண் ஒருவர், மீண்டுவர முடியாது பல நாள்கள் போராடி உயிரி ழந்துள்ளார் என்ற தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
பிரேஸில் நாட்டிலுள்ள ரிச்சாவ் தாஸ் நேவ்ஸ் என்ற இடத்தில், ரோசங்கலா அல்மேடா தாஸ் சாண்டோஸ் என்ற 37 வயதுப் பெண் கடந்த சில நாள்களுக்கு முன் உயிரிழந்துள்ளார். குடும்ப வழக் கப்படி அவரை சவப்பெட்டியில் வைத்து உறவினர்கள் அடக்கம் செய்துள்ளனர்.
ரோசங்கலா அடக்கம் செய்யப்பட்டு 11 நாள்கள் ஆன நிலையில் அந்த வழி யாகச் சென்ற பெண் ஒருவர் அவரது கல்லறையிலிருந்து அலறல் சத்தமும், சவப்பெட்டியைத் தட்டும் சத்தமும் கேட் பதைக் கவனித்து, அவரது உறவினர்க ளுக்குத் தகவல் கொடுத்துள்ளார்.
ரோசங்கலாவின் உறவினர்கள் கல் லறையைத் தோண்டி சவப்பெட்டியை வெளியே எடுத்தனர். அந்தச் சவப்பெட் டியைத் திறந்த போது, ரோசங்கலாவின் உடல் அடக்கம் செய்தபோது இருந்த நிலையிலிருந்து திரும்பியிருந்தது. அவ ரது மூக்கு மற்றும் காதில் வைக்கப்பட்டி ருந்த பஞ்சு கீழே கிடந்துள்ளது.
அவரது கைகளிலும் நெற்றியிலும் இரத்தம் வழிந்துள்ளதும், சவப்பெட்டியின் ஆணி அடிக்கப்பட்ட மூடி மேல் நோக்கித் தள்ளப்பட்டிருப்பதும் தெரிந்துள்ளது.
ரோசங்கலாவின் உடலில் சூடும் இருந்தது. அதிர்ச்சி அடைந்த அவரது உறவினர்கள் உடனடியாக அவரை மருத்துவமனைக் குக் கொண்டு சென்றனர். ஆனால் அவ ரைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவர் உயிருடன் இல்லை என்று கூறியுள்ளார். அதேசமயம், அண்மையில்தான் அவர் உயிரிழந்துள்ளார் என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர். (எ-இ)

# மீண்டும் கொரோனா

நியூயோர்க், ஓக.20
அமெரிக்காவில் தற்போது மிகவும் மாற்றமடைந்த கொரோனா வைரஸ் திரிபு ஒன்று இனங்காணப்பட் டுள்ள நிலையில், அந்த வைரஸ் திரிபு கண்காணிக் கப்பட்டு வருகின்றது என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.
இந்தக் கொரோனா வைரஸ் திரிபு 'பிஏ 2.86' என அடை யாளம் காணப்பட்டுள்ளது என்று அமெரிக்காவின் நோய்த் தடுப்பு மற்றும் கட் டுப்பாட்டு நிலையம் அறிவித் துள்ளது. 'சார்ஸ் கொவ்வி2' புதிய பரம்பரையான இந்த வைரஸ் திரிபை உலக சுகா தார நிறுவனம் கண்காணிக்க வேண்டிய வைரஸ்கள் பட் டியலில் இணைத்துள்ளது.
டென்மார்க் மற்றும் இஸ்ரே லிலும் இந்தக் கொரோனா வைரஸ் திரிபுகள் அடையா ளம் காணப்பட்டுள்ளன என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. (எ-இ)

# 7 சிசுக்களைக் கொன்ற கொலைகாரத் தாதி!

*பிரிட்டனில் அதிரவைக்கும் சம்பவம்*

லண்டன், ஓக.20
பிரிட்டனில் தாதியர் ஒருவர் மீது சிசுக்களைக் கொன்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்த நிலையில், அவர் மீதான குற் றச்சாட்டு நீதிமன்றில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம் பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.
லூசி லெட்பி என்ற இந்தத் தாதி லூசி வடமேற்கு பிரிட்ட னில் உள்ள கவுன்டஸ் செஸ் டர் மருத்துவமனையில் 2015 முதல் 2016ஆம் ஆண்டுவரை பணியாற்றினார். அந்தக் கால கட்டத்தில் அந்த மருத்துவம னையின் மகப்பேற்றுப்பிரிவில் சிசுக்கள் உயிரிழப்பது, திடீர் உடல்நலக்குறைவால் பாதிக் கப்படுவது அதிகரித்திருந்தது. இதுபோன்ற சம்பவங்கள் நடக் கும் இடத்தில் லூசி இருந்தமை கண்டறியப்பட்டது.
2017ஆம் ஆண்டு இந்தச் சம்பவங்கள் தொடர்பில் விசா ரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. விசாரணைகளின்போது சிகிச் சைக்குப் பிந்திய மருத்துவக் குறிப்பேடுகள் லூசியின் வீட்டி லிருந்து மீட்கப்பட்டன. அவற்



றில் "நான் ஒரு பாவி", "இதற்கு நான்தான் காரணம்" என்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்த தைப் பொலிஸார் அவதானித் தனர். விசாரணைகளின் அடிப் படையில் 2018ஆம் ஆண்டு லூசி கைது செய்யப்பட்டார். இந்த வழக்குத் தொடர்ந்து நடைபெற்று வந்தது. வழக்கின் தீர்ப்பு தற்போது வழங்கப்பட் டுள்ளது.
லூசி மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகள் சந்தேகத்துக்கு இட மின்றி நிரூபிக்கப்பட்டுள்ளன என்று வழக்கை விசாரித்த நீதிபதிகள் தெரிவித்தனர்.
லூசி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், அவருக்கு ஆயுட்காலச் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் என்று கூறப்படுகின்றது. இந்த வழக்குத் தொடர்பான தீர்ப்பு நாளை திங்கட்கிழமை வழங் கப்படவுள்ளது. (எ-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாக வும் செயற்படுவீர்கள். உறவினர்கள் வரு கையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டா கும். புதிய முயற்சி சாதகமாக முடியும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூல மான நாள். புதிய முயற்சிகள் சாதகமா கும். விட்டுப்பிடித்துச் செல்லவும். உற வி னர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**மிதுனம்:** சாதிக்கவேண்டும் என்ற துடிப்புடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகளில் நன்றாக சிந்தித்து செயற் படுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். தாயின் விருப் பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** சிந்தித்து செயற்படவேண்டிய நாள். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள் ளது. ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. வீண் செலவுகளால் கையிருப்பு கரையும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றிகர மாக நிறைவேறும். எதிரிகளால் ஏற் பட்ட தொல்லைகள் விலகும். சகோத ரர்களால் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சி நிலவும். காரியம் சாதகமாக முடியும்.

**துலாம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். வாழ்க்கைத்துணைவழி உறவி னர்களால் ஆதாயம் உண்டாகும். மற்றவர்களின் தலையீட்டைத் தவிர்க்க வும். எதிலும் அவசரம் வேண்டாம்.

**விருச்சிகம்:** எடுத்த காரியம் அனுகூல மாக முடியும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்ப டும். புதிய முயற்சி சாதகமாக முடியும். திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர் கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்ளப்படும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியம் மேம்படும். உறவி னர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். காரியங்கள் இழுபறியாகும்.

**கும்பம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்ச னங்களும் ஏற்படக்கூடும். சிறு சங்கடம் ஏற்படும். பாதிப்பு எதுவும் இருக்காது.

**மீனம்:** பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். தந்தைவழி உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எதிர்ப்பும் உரிமையும்!

முல்லைத்தீவு – குருந்தூர்மலை ஆதிசிவனுக்கு ஒருவழியாக பொங்கல் வழிபாடுகள் நடத்தி முடிக்கப்பட்டிருக்கின்றன. ஜூலை மாதம் 14ஆம் திகதிய பொங்கல் வழிபாடுகள் பொலிஸாராலும், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளாலும், பிக்குகள் தலைமையிலான காடையர் கூட்டத்தாலும் தடுத்து நிறுத்தப்பட்டதால் கைவிடப்பட்டிருந்தன. அன்றையநாளில் களேபர பூமியாகத்தான் குருந்தூர்மலை காட்சியளித்தது. ஆதலால், நேற்றுமுன்தினம் ஏற்பாடாகியிருந்த பொங்கல் வழிபாடுகளின் சாத்தியப்பாடு தொடர்பிலும், நடக்குமா – நடக்காதா என்பதான ஓர் இருண்மை நிலையே இருந்துவந்தது. இவ்வாறானதொரு பின்னணியில்தான் இந்தப் பொங்கல் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தின் இறுக்கமான கட்டளைகளுக்கு அமைய ஆதிசிவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால், மத அனுட்டானங்களுக்கு உரித்தான மகிமையும் கண்ணியமும் இந்தப் பொங்கலுக்கு வழங்கப்பட்டதா? என்று கேட்டால் அதற்குரிய ஒற்றைப் பதில் 'இல்லை' என்பதே! விரல் விட்டு எண்ண முடியாத அளவுக்கு – பௌத்த பேரினவாத பாணியிலான நீண்டதும், நெடியதுமான தொடர் கெடுபிடிகளுக்கு மத்தியில் பதற்றம் மலிந்த பூமியாகத்தான் நேற்றுமுன்தினமும் குருந்தூர்மலை மாற்றப்பட்டது. ஆதிசிவனுக்கான பொங்கல் வழிபாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்காக பொலிஸார் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தை நாடியிருந்தனர். இந்தத் தடைகேட்புக்கான பிரதான காரணமாக, 'சம்புமல்கஸ்கட ராஜமகா விகாராதிபதி பொங்கலை எதிர்க்கின்றார். இதனால் பிரச்சினைகள் வரலாம்' என்றுதான் பொலிஸார் குறிப்பிட்டிருந்தனர். ஒரு தனிநபர் அல்லது அவர் தலைமையிலான ஒரு குழு, ஒரு விடயத்தை எதிர்க்கின்றது என்பதற்காக எவ்வாறு பிறிதொருவரின் உரிமையைப் பறிக்கலாம்? தமிழர்களின் மனங்களில் கனன்றுகொண்டிருந்த இந்தக் கேள்வியைத்தான், நீதிமன்றம் தன் கட்டளை மூலமாக அழுத்தம் திருத்தமாகப் பதிவுசெய்தது.


'வழிபாட்டு உரிமை என்பது ஒவ்வொருவருக்கும் அரசமைப்பால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. சம்புமல்கஸ்கட விகாராதிபதியோ அல்லது அவருடன் வரும் குழுவினரோ எதிர்க்கின்றனர் என்பதற்காக பிறிதொரு தரப்பினரின் (தமிழர்களின்) வழிபாட்டுரிமையை மறுக்க முடியாது' என்ற சாரப்படவே முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் தன் கட்டளையைப் பிறப்பித்தது. உண்மையில், பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய மேற்கோள் இது. அதேநேரம் நீதிமன்றத்தின் இந்தக் கட்டளை வெறுமனே குருந்தூர்மலைக்கோ அல்லது ஆதிசிவனுக்குப் பொங்கலிடும் விவகாரத்துக்கோ மட்டுமான விடயமல்ல. இலங்கையில் இதுவரைகாலமும் இடம்பெற்ற பல்வேறு அநீதிகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் இனப்பிரச்சினைகளுக்குமான 'பொதுத் தீர்ப்பாகக்கூட' இதைக் கொள்ளலாம். இனிவரும் காலங்களில் தமிழர்களின் ஆதிவாழ்விடங்களில் குறிப்பாக இன்னொரு பதற்றபூமியாக இருக்கும் வெடுக்குநாறி மலையிலும் வழிபாட்டுரிமை தடை செய்யப்படாதிருக்க இந்தத் தீர்ப்பு உதவலாம்.

இந்தத் தீர்ப்பு இன்னொரு உண்மையையும் உணர்த்துகின்றது. எதிர்ப்புகள் வருகின்றன என்பதற்காக, உரிமைக்கான குரலைக் கைவிடக்கூடாது என்பதே அந்த உண்மை. குறிப்பாக, இனப்பிரச்சினைக்கான தீர்வுவிடயத்திலும் இதேபோக்கை நாம் கடைப்பிடிக்கவேண்டும். '13' தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையப்போவதில்லை என்றபோதிலும், குறைந்தபட்சம் அதைக்கூட நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ரணிலோ அல்லது இதற்கு முன்னர் இருந்த ஜனாதிபதிகளோ முன்வரவேயில்லை. 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால், அது சிங்கள மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பை உருவாக்கும். இது நாட்டில் குழப்பங்கள் வருவதற்குக்கூட காரணமாக அமையும் என்பதுதான் 13 புறக்கணிக்கப்படுவதற்கும், கண்டும் காணாமல் விடப்படுவதற்குமான முதன்மைக் காரணங்கள். பேரினவாதிகள் எதிர்க்கின்றார்கள் என்பதற்காக தமிழர்கள் தங்களின் உரிமைகளைக் கேட்காமல் இருக்கவேண்டும் என்றில்லை. முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தின் கட்டளை, அதன் நியாய ஆதிக்க எல்லைகளைக் கடந்து எதிரொலிக்கட்டும். நாடாளுமன்றத்திலும்கூட...

## நாளொரு நல்வார்த்தை

"பெரிய வெற்றி வேண்டும் என்றால், நீங்கள் சில நேரங்களில் பெரிய அபாயங்களை எதிர்கொள்ளத் துணிய வேண்டும்"

– பில்கேட்ஸ்



# மாகாணசபைக்குச் சமாதி கட்டி மாவட்டசபையை உருவாக்குக

## ஐக்கிய மக்கள் கட்சி வலியுறுத்து



கொழும்பு, ஓக. 20

**மக்களுக்குத் தீர்வை வழங்காத காலாவதியான- பயனற்ற கருத்தாக மாறியுள்ள - மாகாணசபை முறைமையை இல்லாதொழிக்கவேண்டும். மத்திய அரசுக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இடையே இடைநிலைக் கட்டமைப்பாக 'மாவட்டசபை' முறையிலேயே அதிகாரங்களை பகிர வேண்டும்.**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் கட்சியின் உறுப்பினரும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருமான டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம், அதிகாரப் பகிர்வு தொடர்பில் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகள் குறித்து எழுத்துமூலம் தெரிவிக்குமாறு ஜனாதிபதி முன்வைத்த கோரிக்கைக்கமைய ஐக்கிய மக்கள் கட்சியால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திலேயே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

நியாயமான அதிகாரப்பகிர்வைக் கொண்ட ஐக்கிய நாட்டை உருவாக்குவதற்கு மாவட்ட சபைகளை நிறுவி, உள்ளூராட்சி அதிகாரிகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்கி புதிய மக்கள் நட்பு அரசமைப்பை உருவாக்க வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு மாகாணசபை முறைமை ஸ்தாபிக்கப்பட்டதன் மூலம் தீர்வு கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதில் மாகாணசபை முறைமை வெற்றியடையவில்லை.

எனவே காலாவதியான, பயனற்ற கருத்தாக மாறியுள்ள மாகாணசபை முறைமை முற்றாக இல்லாதொழிக்கப்படவேண்டும். அதுவே எமது கட்சியின் நிலைப்பாடு - என்றுள்ளது. (ச-44)

# ஐ.தே.கட்சியில் இனி 4 பதவிகள் மட்டுமே

## அதிரடி மறுசீரமைப்பு

கொழும்பு, ஓக. 20

ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பில் மாற்றங்கள் செய்யப்பட்டு கட்சி அதிரடியாக மறுசீரமைக்கப்படவுள்ளது என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி பிரதான 4 பதவிகளைத் தவிர ஏனைய பதவி நிலைகளை இல்லாது செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

தலைவர், தவிசாளர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளைத் தவிர பிரதித் தலைவர், உப தலைவர், தேசிய அமைப்பாளர் உள்ளிட்ட பதவிகள் நீக்கப்படவுள்ளன.

நீக்கப்படும் பதவிகளை வகித்தவர்கள் உட்பட கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களை உள்ளடக்கி அதியுயர் அதிகாரக் குழுவொன்று அமைக்கும் வகையில் கட்சியின் யாப்பு மறுசீரமைக்கப்படவுள்ளது. (ச-இ)

# நாட்டிலிருந்து வெளியேறும் 5 ஆயிரம் மருத்துவர்கள்!

கொழும்பு, ஓக. 20

வெளிநாடுகளில் பணியாற்றுவதற்குத் தகுதியுடைய 5 ஆயிரம் மருத்துவர்கள் நாட்டில் இருந்து வெளியேற உள்ளனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் பேச்சாளர் சமில் விஜயசிங்க தெரிவித்துள்ளதாவது:

இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் உடனடியாக முன்வரவேண்டும். நாட்டில் உள்ள மருத்துவர்களில் 5 ஆயிரம் பேர் நாட்டை விட்டு வெளியேறுகின்றார்கள் என்றால் அது மிகப் பெரிய எண்ணிக்கை - என்றார். (எ-இ)

## நாளை

21.08.2023

திங்கட்கிழமை

ஆவணி 04

சுபநேரம் : 12.05 - 01.35

ராகுகாலம் : 07.35 - 09.05

நல்லூர் கந்தசுவாமி கொடியேற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச கூட்டுறவு தினம் யாழ்ப்பாணத்தில் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.20

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்தும் 101 ஆவது சர்வதேச கூட்டுறவு தின நிகழ்வுகள் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை உப தலைவர் க.மகாதேவன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம். சார்ள்ஸ், சிறப்பு விருந்தினராக வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி.தேவந்தனி பாபு ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச-ரி,17)

## கசிப்பு வைத்திருந்த சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், ஓக.20

சுழிபுரம் பகுதியில் வீட்டில் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேக நபரொருவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

புலனாய்வுத் தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் வீட்டைச் சோதனையிட்டபோது 3ஆயிரத்து 750 மில்லிலீற்றர் கசிப்பு சந்தேகநபரிடமிருந்து மீட்கப்பட்டது.

சந்தேகநபருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)

## ஜப்பானின் உர விநியோகம் அளவெட்டியில் அடுத்தவாரம்

யாழ்ப்பாணம், ஓக. 20

ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியில் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பினூடாக இலவசமாக வழங்கப்பட்ட யூரியா உரம் அளவெட்டி தெற்கு கமக்கார அமைப்பால் விநியோகிக்கப்படவுள்ளது.

கீரிமலை கமநல சேவை நிலையத்தில் வைத்து எதிர்வரும் 28 ஆம், 29ஆம் திகதிகளில் அவை விநியோகிக்கப்படவுள்ளன.

2023ஆம் ஆண்டுக்கான உரமானியப் பதிவுகள் நாளை திங்கட்கிழமையிலிருந்து கிராமஅபிவிருத்திச் சங்கத்தில் மேற்கொள்ளப்படும்.

விவசாயிகள் உரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான 2023ஆம் ஆண்டுக்கான ஏக்கர்வரி, வருடாந்த சந்தாப்பணம் ஆகியவை செலுத்திய பற்றுச்சீட்டுகளை கொண்டுவரவேண்டும்.

30 பரப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கு 25 கிலோ உர மூடையும் 60 பரப்புக் குட்பட்ட விவசாயிகளுக்கு 50 கிலோ உரமூடையும் வழங்கப்படவுள்ளன என்று செயலாளர் வ.நல்லதம்பி தெரிவித்துள்ளார். (ச)

# வறட்சி தொடருமானால் நீர் வழங்கல் சிக்கலாகும்!

### சிக்கனமாகப் பயன்படுத்துமாறு பொதுமக்களிடம் கோரிக்கை

கொழும்பு, ஓக.20



**தற்போது நிலவும் வறட்சியான காலநிலை மேலும் இரு மாதங்களுக்கு நீடிக்குமானால் நீர் விநியோகத்தில் சிக்கல் ஏற்படும் என்று நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை தெரிவித்துள்ளது.**

தேவையற்ற விடயங்களுக்கு நீரைப் பயன்படுத்துவதை மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

குருநாகல் பண்டுவஸ்நுவர விலுள்ள கொலமுனு ஓயா தற்போது முற்றாக வற்றியுள்ளது. அதையடுத்து பண்டுவஸ்நுவர, பண்டார கொஸ்வத்தை பகுதிகளுக்கு நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் பவுஸர்களின் மூலமே நீர் விநியோகிக்கப்படுகிறது.

அதேவேளை, நீர்வழங்கல் சபைக்குச் சொந்தமான நீர் நிலைகளில் 50 வீதம் நீர் குறைவடைந்துள்ளது. மன்னாரில் நிலவும் வறட்சியால் கோரைக்குளம் பறவைகள் கண்காணிப்பகத்தில் உள்ள குளங்கள் வற்றியுள்ளன. புலம்பெயர் பறவைகள் அதிகளவில் சஞ்சரிக்கும் இடமாகவே கோரைக்குளம் பறவைகள் கண்காணிப்பகம் விளங்குகின்றது. தற்போது மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளில் கால்நடைகளும் நீரின்றி நடமாடுவதை அவதானிக்க முடிகிறது.

யாழ்ப்பாணம், சங்கானை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அராலி, பொன்னாலை பகுதிகளில் சிறு கடல் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



## வேலணைப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஓக.20

வேலணைப் பிரதேசசெயலக பண்பாட்டுப் பெருவிழா நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை வேலணை மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளரும் பிரதேசத்தின் பண்பாட்டுப் பேரவையின் தலைவருமான கைலாயபிள்ளை சிவகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்திராக யாழ். மாவட்டச் செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் பங்கேற்றார்.

நிகழ்வில் வேலணைப் பிரதேசத்தைச் சேர்ந்த 13 கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து கலைஆற்றுகைகள் நிகழ்வைச் சிறப்பித்தன.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் லாகினி நிருபராஜ், வேலணை மத்திய கல்லூரி அதிபர் ஹஸ்ரன் றோய், பிரதேச செயலக அலுவலர்கள் , கிராம மக்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-27)

## குருதிக்கொடை நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், ஓக.20

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நாளை திங்கட்கிழமை குருதிக் கொடை நிகழ்வு ஏற்பபாடு செய்யப்பட்டுள்ளது.

காலை 9 மணிக்கு பிரதேசசெயலக மண்டபத்தில்ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் ஆர்வமுள்ளோரைக் கலந்து கொண்டு குருதிக் கொடையளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ-9)

## அலங்காரத்திருவிழா

பளை, ஓக.20

இயக்கச்சி, மல்வில் கிருஷ்ணன் ஆலய அலங்காரத்திருவிழா இன்று ஆரம்பமாகி 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் 30ஆம் திகதி சமுத்திரத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி கேணித் தீர்த்தத் திருவிழாவுடன் அலங்காரத் திருவிழா நிறைவுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

## பாலஸ்தாபனம்

சாவகச்சேரி, ஓக.20

மிருசுவில் உசன் கஜகேணி விநாயகர் கோயில் பாலஸ்தாபன கிரியைகள் நாளை திங்கட்கிழமை மு.ப. 9.50 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபைத் தலைவர் சி. தேவகுமார் அறிவித்துள்ளார். (ரி-9)

## தேங்காய் மட்டைக்குள் சூட்சுமமாக மரக்கடத்தல்

### வாகனச்சாரதி கைது

முல்லைத்தீவு, ஓக.20

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வாகனமொன்றில் தேங்காய் மட்டைகளுக்குள் மறைத்து சூட்சுமமாக எடுத்துச் செல்லப்பட்ட தேக்க மரக்குற்றிகள் சாவகச்சேரிப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் வாகனம் ஒன்றை மறித்துச் சோதனையிட்டபோது தேக்கமரங்கள் கடத்தப்படுவதை கண்டு பிடிக்கப்பட்டது. அந்த வாகனத்தில் இருந்து 3 லட்சம் ரூபா பெறுமதியான 13 தேக்க மரக் குற்றிகள் மீட்கப்பட்டன. அவற்றை மறைத்து கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் முல்லைத்தீவைச் சேர்ந்த வாகனச் சாரதி கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரையும் சான்றுப் பொருள்களையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். (ச-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

சஞ்சீவி

Registered as a Newspaper

*அப்பாவை இருக்கையில் பார்க்கார்
அமாவாசை பிடிப்பதிலும் தோற்கார்
தப்பென்று சொல்லிப்பார்
தப்பாகத் தோணாது
இப்போஇது தான்பாஷன் ஏற்கார்.*
- வடிவழகையன்

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 ஆவணி 3 ஞாயிற்றுக்கிழமை (20.08.2023) சிகரம்: 164



# சிதறடிக்கப்படும் தமிழ்க் கவனக்குவிப்பு

○ நிலாந்தன்

குருந்தூர்மலை , வெடுக்குநாறிமலை, பறாளாய்முருகன்கோயில்,தையிட்டி, திருகோணமலை,பெரியகுளம் உச்சிப்பிள்ளையார் மலை,மாதவனை மயிலத்தமடு மேய்ச்சல் தரை,ராவணன் தமிழனா இல்லையா?, மேர்வின் டி சில்வா தமிழர்களின் தலைகளைக் கொய்வாரா..... என்றிவ்வாறாக அண்மைக் காலங்களில் தமிழ்க்கட்சிகள்,செயற்பாட்டாளர்கள், ஊடகங்களின் கவனம் வெவ்வேறு திசைகளில் ஈர்க்கப்படுகின்றது.கிழமைக்கு ஒன்று அல்லது நாளுக்கு ஒன்று என்று ஏதோ ஒரு விவகாரம் தமிழ் மக்களின் கவனத்தை ஈர்க்கிறது.

எங்காவது ஒரு புதிய விகாரை கட்டப்படுகிறது. அல்லது எங்காவது ஒரு தொல்லியல் சின்னம் அபகரிக்கப்படுகிறது, எங்காவது ஒரு நிலத்துண்டு அளவீடு செய்யப்படுகிறது அல்லது பறிக்கப்படுகின்றது.அல்லது யாராவது ஒரு சிங்கள அரசியல்வாதீ தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துகளை வெளிப்படையாகப் பேசுகிறார்....இப்படியாக அடிக்கடி புதிது புதிதாக விவகாரங்கள் மேலெழுகின்றன. தமிழ் அரசியல்வாதிகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகங்களில் கவனங்கள் புதிய விடயங்களின் மீது குவிக்கப்படுகின்றன.

இவ்வாறு தமிழ்ச்சமூகத்தின் கவனத்தை அடுத்தடுத்து புதிய விடயங்களின் மீது குவிய வைப்பதன்மூலம் திட்டமிட்டுத் தமிழ்ப் போராட்டசக்தி சிதறடிக்கப்படுகின்றதா?அரசாங்கம் திட்டமிட்டு "ட்ரெண்ட்களை செற்" பண்ணுகின்றதா?

சரத் வீரசேகர சொல்லுகிறார் 'இராவணன் ஒரு தமிழ் அரசன் இல்லை' என்று. மேர்வின் டி சில்வா சொல்கிறார்... 'விகாரைகள் கட்டப்படுவதை எதிர்த்தால் தமிழ் மக்களின் தலைகளைக் கொய்து வருவேன்' என்று. நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவற்றுக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் மினக்கெட்டுப் பதில்கூற வேண்டிய விடயங்கள் அல்ல. அவர்கள் திட்டமிட்டு தமிழ்மக்களின் கவனத்தைச் சிதறடிக்கிறார்கள். அவர்கள் திட்டமிட்டு தமிழ் மக்களை ஆத்திரப்படுத்துகிறார்கள். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் கட்சிகளும் இது விடயத்தில் அரசாங்கம் விரும்புவதுபோல அல்லது சிங்கள-பௌத்த தீவிரவாதிகள் விரும்புவதுபோல அவர்கள் இழுக்கும் திசைக்கெல்லாம் எடுபடக்கூடாது. நிதானமாக விடயங்களை அணுகவேண்டும்.அரசாங்கம் அல்லது சிங்கள -பௌத்த தேசியவாதிகள் திட்டமிட்டு 'ட்ரெண்ட்களை' செட் பண்ணுகின்றார்கள்.அந்த 'ட்ரெண்டின்' பின் தமிழ்மக்கள் அலையத் தேவையில்லை. அலையவும் கூடாது.

இந்த விடயத்தில் ஒரு மையத்திலிருந்து முடிவெடுக்கும் மக்களாக,ஒரு மையத்திலிருந்து விவகாரங்களை விளங்கிக் கொள்ளும் மக்களாக,ஒரு மையத்திலிருந்து எதையும் அணுகும் மக்களாக தமிழ்மக்கள் திரள வேண்டும். பிரச்சினைகளை அவற்றின் தொகுக்கப்பட்ட வடிவத்தில்,அவற்றுக்குப் பின்னால் இருக்கும் அரசியல் சித்தாந்தத்தின் அடிப்படையில் ஒட்டுமொத்த வரைபடம் ஒன்றுக்குள் வைத்து தமிழ்மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் ஏற்கனவே சிதறிப்போயிருக்கும் தமிழ் மக்களின் கவனத்தை மேலும் சிதறடிப்பதன்மூலம் அரசாங்கம் தான் விரும்பியதைச் சாதித்து விடும்.

இங்கே நான் கட்சிகளின் ஐக்கியத்தைப் பற்றிக் கதைக்க வரவில்லை.பல மாதங்களுக்கு முன் காரைநகர் பிரதேச சபையில் யாரைத் தவிசாளராகத் தெரிவது என்ற விவகாரத்தின்போது தமிழ்த் தேசிய முன்னணியோடு நான் உரையாடினேன். அப்பொழுது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் என்னிடம் சொன்னார்...'சாதி ஏற்றத்தாழ்வுகள் போன்ற விவகாரங்களில் நீங்கள் சுட்டிக்காட்டும் பிரச்சினைகளை நாங்கள் உடனடியாகத் தீர்த்து வைப்போம். ஆனால் ஐக்கியம் என்ற ஒரு விடயத்தை மட்டும் தயவு செய்து எங்களிடம் கேட்க வேண்டாம்...' என்று.

இந்தக்கட்டுரை கட்சிகளின் ஐக்கியத்தைப்பற்றி உரையாடவில்லை.தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவது பற்றியே உரையாடவிழைகிறது. தேசியவாத அரசியல் என்றால் ஒரு மக்கள் கூட்டத்தை பெருந்திரளாகத் திரட்டுவது தான்.தமிழ் மக்கள் ஒரு பெரும் திரளாக, தேசமாக விவகாரங்களை எதிர்கொள்ளவேண்டும்.நடைமுறையில் அவ்வாறு தமிழ்மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் பொழுது புனிதர்களையும் விசுவாசிகளையும் உண்மையானவர்களையும் மட்டும் வைத்து ஒரு தேசிய இயக்கத்தைக் கட்டியெழுப்புவது அம்புலி மாமாக் கதைதான். ஏனென்றால் ஒரு மக்கள் கூட்டம் எனப்படுவது பல்வேறு அடுக்குகளைக் கொண்டிருக்கும்.பல்வேறு அபிலாஷைகளைக் கொண்டிருக்கும்.பல்வேறு நோக்குநிலைகளைக் கொண்டிருக்கும். ஒரு மக்கள்கூட்டத்தைத் தட்டையாக,ஒற்றைப் பரிமாணத்தில் விளங்கிக் கொள்ள முடியாது. அதற்குள் பல்பரிமாணம் இருக்கும் என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரு மக்கள் கூட்டத்துக்குள் நல்லவர்களும் இருப்பார்கள், கெட்டவர்களும் இருப்பார்கள்.ஒரு நபர் ஒரே நேரத்தில் தேசியவாதி போலவும் இருப்பார், அதேசமயத்தில் ஆண் ஆதிக்கவாதியாகவும் இருப்பார்.ஒரு நபர் ஒரே நேரத்தில் சாதிவாதியாகவும் இருப்பார்,தமிழ்த் தேசியவாதியாகவும் தோற்றம் காட்டுவார். ஒரு நபர் ஒரே நேரத்தில் மதவாதியாகவும் இருப்பார், தமிழ்த் தேசியவாதியாகவும் தோற்றம் காட்டுவார்.தேசியவாதம் எனப்படுவது பல்வகைகளில் மீது ஒரு மக்கள் திரளைக் கட்டியெழுப்புவது என்ற கோட்பாட்டு விளக்கத்தின் அடிப்படையில் சிந்தித்தால் மதவாதி,சாதிவாதி,பிரதேசவாதி, ஆணாதிக்கவாதி போன்றவர்கள் தேசியவாதிகளாக இருக்கமுடியாது. ஆனால் தமிழ்க் கட்சிகளில் காணப்படும் முக்கியஸ்தர்களில் எத்தனை பேர் அவ்வாறு முழுமையாக தேசியப்பண்பு மிக்கவர்களாக இருக்கிறார்கள்? ஏன் ஆயுதப் போராட்டத்திலேயே அந்தப் பிரச்சினை இருந்ததுதானே?ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட இயக்கங்கள் மத்தியில் காணப்பட்ட போராளிகள் எத்தனை பேர் அவ்வாறு தேசியப்பண்பு மிக்கவர்களாகக் காணப்பட்டார்கள்? இது ஒரு அடிப்படைப் பிரச்சினை.

ஒரு மக்கள் இயக்கம் என்று வரும்பொழுது .ஒரு பெரிய கட்சி என்று வரும் பொழுது அதற்குள் நல்லதும் இருக்கும், கெட்டதும் இருக்கும். ஒரு மக்களைப்பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய இயக்கம் எனப்படுவது அந்த மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய நல்லதையும் கெட்டதையும் பிரதிநிதித்துவப்படுத்தும் என்பது யதார்த்தமாகும்.,

ஒரு பெரிய மக்கள் இயக்கம் எனப்படுவது அல்லது ஒரு பெரிய தேசிய இயக்கம் எனப்படுவது முழுக்க முழுக்க கொள்கைவாதிகளையும் தூய்மைவாதிகளையும் புனிதர்களையும் மட்டும் வைத்து கட்டியெழுப்பப்படும் ஒன்று அல்ல. யதார்த்தத்தில் அது ஒரு மக்கள் கூட்டத்தில் காணப்படும் எல்லா அடுக்குகளையும் ஏதோ ஒரு மையத்தில் இணைப்பதாகவே காணப்படும். இது தமிழ்த் தேசிய இயக்கங்களுக்கும் பொருந்தும்.

புனிதர்களையும்,நல்லவர்களையும், கொள்கைவாதிகளையும், இலட்சியவாதிகளையும் மட்டும்வைத்து ஒரு தேசிய இயக்கத்தைக் கட்டமுடியாது.ஆனால் குறிப்பிட்ட இயக்கத்தில் அல்லது கட்சியின் மையத்தில் இருப்பவர்கள் அல்லது வழிகாட்டும் பொறுப்புகளில் இருப்பவர்கள் ஒப்பீட்டளவில் அதிகம் தேசியப் பண்பு மிக்கவர்களாக இருக்கவேண்டும் என்பது ஒரு கட்டாய நிபந்தனையாகும்.

ஒரு கட்சியின் அல்லது மக்கள் இயக்கத்தின் முடிவெடுக்கும் பொறுப்புகளில் இருப்பவர்கள் கொள்கைவாதிகளாக, இலட்சியவாதிகளாக தேசியப் பண்பு ஒப்பீட்டளவில் அதிகம் கூடியவர்களாக இருக்கவேண்டும் என்பது கட்டாயம்.கட்சித் தொண்டர்கள் ஆதரவாளர்கள் எல்லாரிடமும் அவ்வாறு எதிர்பார்க்க முடியாது.அவர்களிடமிருக்கும் எதிர்த்தேசிய அம்சங்களைக் களைநீக்கம் செய்ய வேண்டியது அல்லது இருள் நீக்கம் செய்ய வேண்டியது மையக்குழுவின் பொறுப்பு. அல்லது தலைமை தாங்கும் நபர்களின் பொறுப்பு.

எனவே ஐக்கியத்தைக் கட்டியெழுப்பும் பொழுது அந்த ஐக்கியத்துக்குள் பலதும் பத்தும் இருக்கும் என்ற யதார்த்தத்தை முதலில் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஒரு ஐக்கியத்தைக் கட்டியெழுப்பிய பின் அந்த ஐக்கியத்துக்கு தலைமைதாங்கும் தரப்புகள் அந்த ஐக்கியத்தை எப்படிக் கொள்கை அடிப்படையில் பலப்படுத்துவது,இறுக்கமாக்குவது என்று சிந்திக்கலாம்.புனிதர்களையும் நீதிமான்களையும் மட்டும் வைத்துக்கொண்டு ஐக்கியத்தைக் கட்டியெழுப்பலாம் என்றால், தமிழ்மக்கள் என்றைக்குமே ஒரு பெருந்திரளாக வர முடியாது.நீதிமான்களிடந்தான் நீதியைக் கேட்கலாம் என்றால் தமிழ் மக்கள் யாகந்தான் செய்யவேண்டும்.

எதிரிக்கு எதிரான கோபந்தான் கடந்த பல தசாப்தங்களாக தமிழ்மக்களை ஒப்பீட்டளவில் பெருந்திரளாகக் கூட்டிக்கட்டி வைத்திருக்கிறது. அதாவது இன எதிர்ப்புணர்வு அல்லது இனமான உணர்வு போன்றவைதான் தமிழ்மக்களைப் பெருமளவுக்கு ஒரு தேசமாகத் திரட்டி வைத்திருக்கின்றன. மாறாக தேசியவாதம் தொடர்பான அறிவுபூர்வமான விஞ்ஞானபூர்வமான கொள்கைகளை விளங்கி தமிழ்மக்கள் ஒரு பெருந்திரளாக மேல் எழுந்தார்கள் என்பது உண்மையல்ல.உலகம் முழுவதிலும் உள்ள பெரும்பாலான எல்லாத் தேசியஇன விடுதலைப் போராட்டங்களுக்கும் இது பொருந்தும். மக்களை ஒரு கருத்து திரட்டுவதை விடவும் எதிரிக்கு எதிரான கூட்டுணர்ச்சி ஒரு மக்கள் கூட்டத்தை இலகுவாகத் திரட்டிவிடும்.

ஒரு பெருந்திரளைக் கட்டியெழுப்புவது அல்லது ஒரு பேரியக்கத்தை கட்டியெழுப்புவது அல்லது ஒப்பீட்டளவில் பெரிய ஐக்கியத்தை கட்டியெழுப்புவது அதாவது தமிழ்மக்களை ஆகக்கூடியபட்சம் ஒரு பெருந்திரளாகக் கட்டியெழுப்புவது என்பது கொள்கையின் அடிப்படையில்அல்லது புனிதமான,விட்டுக்கொடுக்கப் பட்ட அளவுகோள்களின் அடிப்படையில் என்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் - சந்திரிகா அரசியலும் பதின்மூன்றும்

அ.நிக்ஸன்





பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி என்ற முறையில் இலங்கை நாடாளுமன்றத்தில் எடுத்துக்கூறிய பல விடயங்கள் செயற்படுத்தப்படும் என்ற நம்பிக்கை எவருக்கும் இல்லை. ஒற்றையாட்சி நாடாளுமன்றத்தில் 1988ஆம் ஆண்டில் அறுதிப் பெரும்பான்மைப் பலத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பதின்மூன்றாவது திருத்தம் முப்பத்து ஏழு வருடங்களாக நடைமுறைக்கு வரவில்லை. ஆனால் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டு மாகாணசபைகள் இயங்கியுமுள்ளன.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்த வடக்கு-கிழக்கு மாகாணங்கள் 2006 இல் இலங்கை உயர் நீதிமன்றத்தினால் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அதன் பின்னர் 2007இல் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டது. 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டது. இரண்டு மாகாணசபைகளிலும் முதலமைச்சர்களாக இருந்து பதவி விலகி யவர்கள், அதிகாரங்கள் எதுவும் இல்லாத மாகாணசபை என்று விமர்சித்தனர். அதுமாத்திரமல்ல வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் உள்ள ஏனைய மாகாணசபை முதலமைச்சர்களுக்கு அதிகாரங்கள் இல்லை என்று நேரடியாகவே சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.




**அர்த்தமில்லாத 13 என்று அம்பலமாக்கிய சந்திரிகா**

குறிப்பாக 1993 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இடம்பெற்ற மேல்மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்ட சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வெற்றி பெற்று முதலமைச்சரானார். ஆனால் பதவியேற்ற சில மாதங்களிலேயே இந்த மாகாண்சபை முறைக்கு அதிகாரங்கள் போதியதாக இல்லை என்று பகிரங்கமாகக் கூறியிருந்தார். அத்துடன் இந்த மாகாணசபை முறையை விடுதலைப் புலிகள் அன்று ஏற்றுக்கொள்ள மறுத்தமை நியாயமானது என்றும் கூறியிருந்தார். அப்போது ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மீது சிங்கள மக்கள் வெறுப்படைந்திருந்த காலம் அது. இதனால் 1987 இல் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்துக்கு அமைவான மாகாணசபை முறையை சந்திரிகா அன்று துணிவுடன் நிராகரித்து அதிகாரங்களும் இல்லை என்று வெளிப்படுத்தியதாகக் கருத முடியும். அப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் காமினி திஸாநாயக்கா அவ்வாறுதான் சந்திரிகா மீது குற்றம் சுமத்தியிருந்தார். ஆனாலும் மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் போதியதாக இல்லை என்று அப்போது நிதியமைச்சராக இருந்து பதவி விலகிய றொனி டி மெல் 1994 இல் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கூறியிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினரான ஓஸி அபயசேகர குணசேகர உள்ளிட்ட பல உறுப்பினர்களும் மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் போதியதாக இல்லை என்று ஒப்புக்கொண்டிருந்தனர். ஆனாலும் சந்திரிகா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி மாகாணசபை முறைக்கு எதிராகவும் அதேநேரம் மாகாணசபைகளுக்கு அதிகாரம் போதாது என்றும் கூறியிருந்தது. அதாவது சிங்கள மக்கள் முன்னிலையில் மாகாணசபை முறைகளுக்கு எதிராகவும் வடக்கு - கிழக்குத் தமிழர்கள் மத்தியில் மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் இல்லை என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிரசாரம் செய்து வந்தது. குறிப்பாக 1994 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் போதாது என்றும் தான் ஜனாதிபதியாகப் பதவியேற்றால் நிச்சயமாகக் கூடுதல் அதிகாரங்களை வழங்குவேன் என்றும் சந்திரிகா கூறியிருந்தார். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்க ளின் போது சந்திரிகா அவ்வாறு வெளிப்படையாகக் கூறியிருந்தார்.

**பகடையாடப்பட்ட '13'**

ஆனால் ஈழத்தமிழர்களின் கூடுதலான வாக்குகளுடன் ஜனாதிபதியாகப் பதவியேற்ற சந்திரிகா மாகாணசபைகளுக்குரிய அதிகாரங்களை அதிகரிக்கவேயில்லை. அதுவும் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் உள்ள அதிகாரங்களைக்கூட முழுமையாக நடைமுறைப்படுத்த சந்திரிகா உடன்படவில்லை. அப்போது போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம் அது. 1990ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை விடுதலைப்புலிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுகளில் அதிகாரப் பகிர்வுக்கு மாத்திரமே சந்திரிகா உடன்பட்டிருந்தார். வடக்கு - கிழக்கு இணைந்த முழுமையான சுயாட்சிக்கும் வடக்கு- கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசம் என்பதை அங்கீகரிக்கவும் அவர் மறுத்திருந்தார்

சமாதானப் பேச்சு முறிவடைந்தபோது இந்தியாவுக்குச் சென்றிருந்த சந்திரிகா மாகாணசபை முறையைக் குழப்பியது விடுதலைப் புலிகள்தான் என்றும், ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்தது புலிகள்தான் எனவும் 'இந்து' ஆங்கில நாளிதழுக்கு வழங்கிய நேர்காணலில் பகிரங்கமாகவே குற்றம் சுமத்தியிருந்தார். அதாவது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இந்திய மத்திய அரசு கொண்டு வந்த நிரந்தர அரசியல் தீர்வுக்குப் புலிகள் தடையாக இருந்தார்கள் என்ற தொனியை அந்த நேர்காணலில் சந்திரிகா வெளிப்படுத்தியிருந்தார்.

1996 ஆம் ஆண்டு போர் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் இலங்கையின் பிராந்தி யங்களை மையப்படுத்தி முன்வைத்த அதிகாரப்பரவலாக்கல் முறையில் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தையும் விடக் கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்ததாக அன்றைய தமிழ்த் தலைவர்கள் நம்பியிருந்தனர். அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் நீலன் திருச்செல்வம் சந்திரிகாவின் அரசியல் தீர்வுத் திட்டத்தை முழுமையாக வரவேற்றிருந்தார். மாகாணசபை முறையை விடவும் பிராந்தியங்களுக்கான அதிகாரங்கள் என்ற திட்டத்தில் கூடுதல் அதிகாரங்கள் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால் இந்தத் திட்டத்தை அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்க எதிர்த்திருந்தார். நாடாளுமன்றத்தில் அந்தத் திட்டத்தின் நகல் பிரதிகளை எரித்தார். நாடாளுமன்றத்தில் ஒரு வாரத்துக்கும் மேலாகத் தொடர்ச்சியாக பெரும் களேபரம் ஏற்பட்டது.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தையும் ஏற்றுக் கொள்ள அல்லது முழுமையாக நடைமுறைப்படுத்தத் தயங்கியதாக ஐக்கிய தேசியக் கட்சி மீது பகிரங்கமாகக் குற்றம் சுமத்திய அப்போதைய அரசமைப்பு விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், பிராந்தியங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கவுள்ள இந்தத்தீர்வுத் திட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பதன் நோக்கம் என்ன? என்ற கேள்வி எழுப்பியிருந்தார்.

சந்திரிகாவின் இந்தத் தீர்வுத் திட்டம் தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது எதிர்க்கட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி, மாகாணசபை முறைக்கு - குறிப்பாகப் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்துக்கு - கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. ஆகவே குறைந்தபட்ச அதிகாரப் பரவலாக்கத்தைக் கூட சிங்கள அரசியல் தலைவர்கள் விரும்பவில்லை என்பதை அப்போதிருந்தே பலரும் அறிந்திருந்தனர். இந்தியாவுக்கும் இது புரியும்.

**திணிக்கப்படும் '13'**

ஆனால் 2009ஆம் ஆண்டு மே மாதம் போர் இல்லாதொழிக்கப்பட்டு 14 வருடங்கள் கடந்துவிட்டபோதும் 13 பற்றியே இந்திய மத்திய அரசும் பேசுகின்றது. குறிப்பாக 2012 ஆம் ஆண்டு முதன் முறையாக இலங்கை மீது போர்க்குற்ற விசாரணை, மனித உரிமைமீறல் குற்றச்சாட்டுகளை முன்வைத்து ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணையிலும் 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதாவது ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்கு அதிகாரப் பங்கீடுதான் ஏற்புடையது என்று 2009 மே மாதத்துக்குப் பின்னரும் தமிழர் தரப்பு வாதிட்டுக் கொண்டிருந்த நிலையில், பதின்மூன்றுதான் அரசியல் தீர்வு என்ற தொனியில் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் பின்னால் இந்தியாதான் செயற்பட்டிருக்கிறது என்பது பகிரங்கமான உண்மை. இறுதியாக 2020ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலும் பதின்மூன்று பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க பதின்மூன்றை நடைமுறைப்படுத்தப் பல யோசனைகளை நாடாளுமன்றத்தில் முன்வைத்து உரையாற்றியிருக்கிறார். ஆனால் இங்கே கேள்வி என்னவென்றால் ஏற்கனவே அறுதிப் பெரும்பான்மையோடு அங்கீகரிக்கப்பட்டுள்ள சட்டம் ஒன்றை முழுமையாக நடைமுறைப்படுத்த ஏன் நாடாளுமன்றத்தின் அனுமதி தேவை? எதற்காகச் சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்?

சிங்களவர்கள் பெரும்பான்மையாக உள்ள நாடாளுமன்றம் ஒன்றில், அதுவும் பதின்மூன்று வேண்டாம் இரத்துச் செய்யுங்கள் என்று 2009 மே மாதம் போர் இல்லாதொழிக்கப்பட்ட பின்னரான ஒரு சூழலில் அதிகளவு சிங்கள உறுப்பினர்கள் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டு வரும் பின்னணியில், பதின்மூன்றை நடைமுறைப்படுத்த ரணில் எடுக்கும் நடவடிக்கை சாத்தியமானதா? நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி என்ற முறையில் ஒரு வர்த்தமானி அறிவித்தல் மூலம் பதின்மூன்றை நடைமுறைப்படுத்த வேண்டிய ரணில், ஏன் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைக் கோரியிருக்கிறார்? என்ற கேள்விகளுக்குரிய பதில் சிங்கள அரசியல் தலைவர்கள் மற்றும் மகாநாயக்கதேரர்கள் அனைவருக்கும் புரியும். நிரந்தர அரசியல் தீர்வாக ஈழத்தமிழர்கள் பதின்மூன்றை விரும்பவில்லை என்பது வேறு. ஆனால் இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பையும் அதன் அரசியல் யாப்பையும் காப்பாற்ற முற்படும் சிங்கள அரசியல் தலைவர்கள் குறைந்தபட்ச அதிகாரப் பரவலாக்கல் தன்மை கொண்ட பதின்மூன்றை நடைமுறைப்படுத்தப் பின்னடிப்பதன் நோக்கம், இது தனியே சிங்கள மக்களின் நாடு என்ற மனநிலை மட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலர்காலையின் வலி

சஞ்சீவி சிறுகதை

இயல்வாணன்

குயில்களின் கூக்குரல்கள், சேவல்களின் கூவல்கள், குருவிகளின் கீச்சொலிகள் கிளிகள், மைனாக்கள் இன்னும் ஏதேதோ பறவைகளின் குரலொலிகள். இந்த பூபாளராகத்துக்கு காது கொடுக்கும் சுகானுபவம் … அப்பப்பா! இந்தக் கூட்டிசையை ஒரு நாளேனும் பதிவு செய்து வைக்க வேண்டும். இந்த இசைக்காக எனது மனதையும், காதுகளையும் திறந்து வைத்தேன். ஒவ்வொன்றின் இசையும் ஒன்று சேர்ந்து புதியதொரு இசையாக இழைந்து வருகிறது. இது என்ன புதிய ஒலி…ஓ..செண்பகத்தின் சத்தம். 'ஒகு..உகு..'என மத்தளம் இசைப்பது போல. ஏனைய ஒலிகளுக்கு தாளம் போடுவது போல. செண்பகத்தைப் பார்த்து எவ்வளவு நாளாகி விட்டது.

அதன் ஒலியைக்கூட அண்மையில் கேட்டதாக ஞாபகமில்லை. யுத்தத்தின் சத்தத்துக்கு முன்னால் தாம் எம்மாத்திரம் என்றெண்ணி எங்கேனும் சென்று விட்டனவா?

முன்பெல்லாம் எங்கள் வீட்டில் பனை ஓலையை குத்திச் சாத்தி அமைத்த வேலியின் இடுக்குகளுக்குள் நுழைந்து புழுக்களைத் தேடிக்கொண்டிருக்கும் இந்தச் செண்பகங்கள். ஓலைக்கு ஓலை தாவி புழுக்களையும், பூச்சிகளையும் கொத்திக் கொண்டு நிலத்துக்கு வந்து அவற்றை உண்ணும். மீண்டும் வேலி இடுக்குகளுக்குள் நுழையும்.

கறுத்த உடலும் மண்ணிறச்சிறகும் சிவந்த கண்களுமாக தத்தித் தத்தித் திரியும் செண்பகம். ஒரு உற்சாகத்தையோ, மகிழ்ச்சியையோ வெளிக்காட்டாச் சுபாவம் அதற்கு. அடிக்கடி உடலைச் சிலிர்துக் கொள்ளும். அதன் அழகு ரசிக்கக் கூடியதல்ல. தாவிப் பறப்பதோ, நடப்பதோ கூட அழகானதல்ல. அடிக்கடி டீசல் இயந்திரம் போல 'ர்க்ஸ்' என ஒலியெழுப்பிக் கொண்டிருக்கும். எங்கள் வீட்டில் பெரியதொரு முருங்கை மரம் நின்றது. வசந்த காலத்தில் முருங்கையிலும் பூக்களும் காய்களும் தொங்கும். அழகான வண்ணத்துப் பூச்சிகளெல்லாம் சுழன்று வரும். அப்போதுதான் முருங்கை மரத்தில் மயிர்க்கொட்டிகளெல்லாம் தலை காட்டும். இரவெல்லாம் இலைகளை அரித்துத் தின்று விட்டு, சூரிய ஒளியைக் கண்டதும் தப்பி ஓடி வந்து, அடிமரத்தில் குவிந்து கொள்ளும். பார்க்கச் சாம்பல் நிறத் தேன்கூடு போல இருக்கும். மயிர்க்கொட்டிகள் என்றாலே அம்மாவுக்கு ஆகாது. உலகத்திலே மிகக் கூடாதவற்றுள் ஒன்றாகவே அவர் மயிர்க்கொட்டிகளைக் கருதினார். தனது தாயாரின் கண் பார்வை போனதற்கு மயிர்க்கொட்டியின் மயிர் கருவிழிக்குள் குத்தியது தான் காரணம் என்று அடிக்கடி சொல்லுவார். மயிர்க்கொட்டிகள் குவிந்திருக்கும் இடத்தில் மண்ணெண்ணெயை ஊற்றி ஓலைகளில் தீ மூட்டி எரித்து விடுவார். நெளிந்து தப்பி ஓடும் புழுக்களை எல்லாம் விட்டு வைக்கமாட்டார். தேடித்தேடி தடி ஒன்றினால் தட்டி எரியும் நெருப்பில் இடுவார்.

அம்மா பொரித்துத் தரும் இறாலைப் பார்க்கும் போதெல்லாம் எரிந்து சுருண்டிருக்கும் மயிர்க்கொட்டிதான் ஞாபகத்துக்கு வரும். அதனால் நீண்ட காலமாக நான் இறால் சாப்பிடுவதில்லை.

அப்போதெல்லாம் இந்த செண்பகங்களும் முருங்கை மரத்தடியில் அதிகமாக காணப்படும். அம்மாவின் வேலையை இலகுவாக்குவது போல அவை மயிர்க்கொட்டிகளைப் பிடித்துத் தின்று விடும். மயிர்க்கொட்டி உடலில் பட்டால் உண்டாகும் சுணைப்பை நானே அறிவேன். எத்தனையோ நாள்கள் இப்படி மயிர்க்கொட்டி பட்டு அவஸ்தைப்பட்டிருக்கிறேன். வெங்காயமோ, சுடுசாம்பலோ தேய்த்தும் கூட அதன் நமைச்சல் தீராது. அடிக்காலில் பட்டால் போதும். எங்கு தேய்த்தும் குணப்படாது. கத்தியை நெருப்பில் சூடு காட்டி, அதனைச் சொறியும் இடத்தில் வைத்து எடுத்தால்தான் குணமாகும். இந்தச் செண்பகங்களுக்குச் சொறிவு உண்டாவதில்லையா? இப்படி அலாதியாய்ச் சுவைத்து உண்கிறதே!

செண்பகங்களைக் கண்டால் அம்மா கடவுளைக் கண்டது போலப் பார்ப்பார்.

"வா…வா.. இந்தச் சனியன்களைப் பிடிச்சுத் திண்டு விடு" என்று தன் பாட்டில் சொல்லிக் கொள்வார். அக்காலத்தில் ஒரு சினிமாப்பாடலும் வந்தது. செண்பகத்தைக் காணும் போதெல்லாம் அதை உரத்துப் பாடுவேன். 'செண்பகமே செண்பகமே தென் பொதிகை சந்தனமே..' என்று அப்பாடல். ஒரு முறை கிணற்றுக் கட்டிலிருந்து பாடிக் கொண்டிருந்த போது செல்வி வந்தாள். "நல்லாய் பாடிறியே… நீ ஏன் சங்கீதம் படிக்கக் கூடாது?"

எனக்குப் பாட வராது. கொஞ்சம் குரலை உயர்த்தினால் கோழி போல கேரத் தொடங்கி விடும். ஆட்களுக்கு முன்னால் பாடும் வெட்கத்தில்தான் வெள்ளிக்கிழமை பிரார்த்தனையிலும் கலந்து கொள்வதில்லை. செண்பகத்தைப் பார்த்த புளுகத்தில் பாடி இப்படி வம்பாகி விட்டது.

"என்னடா ராசு.. சித்திரத்தை விட்டு சங்கீதத்துக்கு மாறனடா. நான் உனக்கு சொல்லித் தாறன்."

"சேச்சே.. எனக்குப் பாட வராது செல்வி… சும்மா செண்பகத்தைப் பார்த்துப் பாடினேன்… அவ்வளவுதான்!"

"..பொய் …உன்னைப் போல நானே பாடமாட்டன். மற்றது உந்தப் பாட்டு செண்பகப் பூவைப்பற்றியது. பறவைகளைப் பற்றியதல்ல.."

"செண்பகப்பூ ..அப்படி ஒரு பூ இருக்கிறதோ?.."

"ஓ..வடிவான பூவாம். இல்லையெண்டால் உந்த வடிவில்லாத பறவையை ஆரும் பாடுவானே? அடைக்கோழி மாதிரி உடம்பைச்சிலிர்த்துக் கொண்டு… சே"

அவள் வாயை சுழித்துச் சொன்னபோது உண்மை என்றுதான் தோன்றியது. அது அழகான பறவையில்லைத்தான்.

செல்வி கூட அப்படித்தான்! கறுப்பாக எண்ணெய் வழியும் தலையுடன், கோழி முட்டைக்கண்களும், மண்வெட்டிப் பற்களுமாக. கறுப்பை மறைக்க அடிக்கடி மஞ்சளில் குளித்திருப்பாள். முன்னோக்கிய பற்களை மறைக்க வலிந்து சொண்டை மூடுவதுதான் ஆக அசிங்கம். ஆனாலும் செண்பகம் போலவே செல்வியையும் பிடித்திருந்தது. இப்போது செல்வியும் இல்லை. இருக்கிறாளோ தெரியவில்லை. இந்தப் பதினைந்து வருடத்தில் சொந்தக் கிராமத்தை விட்டு வெளியேறி வண்டுருட்டிய மலஉருண்டைகள் போல ஊரூராக அலைக்கழிந்து சிதறி அழிந்துதான் போனோம். என்னைப் போலவே செல்வியும் ஏழெட்டு இடமாக அலைந்து எங்காவது ஒரு ஊரின் மூலையில் இடம்பெயர்ந்து வாழக்கூடும். இல்லையேல் புலம் பெயர்ந்து வெளிநாடொன்றில் இருக்கலாம். சில வேளை யுத்தத்தில் காணாமற் போன, இறந்து போன இலட்சக்கணக்கானோரில் அவளும் அடங்கியிருக்கலாம்… போராளியாகக் கூட மாறியிருக்கலாம்.

செல்வி தொடர்ந்து அரியண்டப்படுத்தி ஒருவாறாக என்னைச் சங்கீதத்துக்கு மாற்றி விட்டாள். மெல்ல மெல்ல இசையில் ஒரு பிரேமையை என்னுள் ஏற்றியவளும் அவளே. குயில் கூவும் போது எதிர்க்குரல் கொடுத்துப் பாடுவதில் அவளுக்கு அலாதிப்பிரியம். நான் கூட பலமுறை அவ்வாறு குயிலோடு சேர்ந்து கூவியிருக்கிறேன். பாடசாலையில் மற்ற மாணவருடன் நான் சண்டையிடும் போதெல்லாம், அவளே என்னைச் சாந்தப்படுத்தி விலக்கி விடுவாள். "கோபப்படாதேடா..கோபப்பட்டால் நரம்பு வியாதி வருமாம். வயித்துப் புண் கூட வருமாம்" என்பாள். கோபம் வரும் போது ஒவ்வொரு ஆணியை மரத்தில் அறையுமாறும், கோபத்தை அடக்கும் போது அவற்றை கழற்றுமாறும் அவள் ஆலோசனை கூறினாள். சில நாட்கள் நான் அவ்வாறு செய்துமிருக்கிறேன். இப்படியாக என்னிடமிருந்த கோப உணர்ச்சியை மெல்ல மெல்லக் கொன்றொழித்து விட்டாள்மயிர்கொட்டியை அழிக்கும் செண்பகம் போல.

ஒரு நாள் நானும் செல்வியும் பாடசாலை விட்டு வரும் போது செண்பகம் ஒன்று பாதையில் நசியுண்டு இறந்து கிடந்தது. பாதையைக் கடக்கும் போது அவதானமில்லாவிட்டால் இப்படித்தான் இறக்க நேரிடும் என்று செல்வி சொன்னாள். தத்தித் தத்தி ஓடும் செண்பகம் லொறியின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் நசிந்து போயிருக்க வேண்டும். இந்த எரு ஏற்றும் லொறிகளுக்கு அவசரந்தான்! குஞ்சரப்பாவைக்கூட ஒரு முறை முட்டி மோதப் பார்த்தது. நல்ல வேளை, கடுகுநாவற் பற்றைக்குள் வீழ்ந்து சிராய்ப்புக் காயங்களுடன் தப்பி விட்டார்.


குஞ்சரப்பாவுக்கு செண்பகத்தில் பற்று உண்டு. கூடவே காகங்கள், கொக்குகள், மைனாக்களிலும். பயிர்களுக்கு எருவோ.குப்பையோ இடும் போது இவை கூட்டம் கூட்டமாக வரும். புழுக்களையும், கறையான்களையும் தின்று தீர்க்கும். இவை வருவது பயிருக்கு நல்லது என்பார் குஞ்சரப்பா.

"இதுகள் எங்கடை சிநேகிதர் மாதிரி. சிநேகிதர் எண்டா ஒருதருக்கொருதர் உதவ வேணும். அப்படித்தான் கமக்காரரும் இதுகளும்" என்றும் சொல்லுவார். குஞ்சரப்பா உரமோ, மருந்துகளோ பாவித்து பயிர் வளர்த்ததில்லை. உள்ளிச்சாறும் வேப்பிலைச்சாறுந்தான் அவரது மருந்துகள். புற்களை பிடுங்கி அழித்து விட்டால் பயிருக்கு ஆபத்து இல்லை என்பது அவரது வாதம். எங்கள் ஊரில் ஆழக்கிணறுகள். சூத்திரத்தில் வளைய வரும் மாடுகள் மூலமே நீர் பாய்ச்சப்படும். குஞ்சரப்பாவின் தோட்டத்திலும் சூத்திரம் இருந்தது. மாடுகளைப் பூட்டி, இரண்டு மூன்று முறை வளைய வருவார். பிறகு சால்வைத்துண்டை ஆசனத்தில் போட்டு விட்டு நீர் பாய்ச்சத் தொடங்கி விடுவார். மாடுகள் வளைய வந்து கொண்டிருக்கும்.

அப்போது தோட்டத்தில் நிறைய செண்பகங்களையும், கொக்குகளையும் காணலாம். புழுக்களை உண்டு

(07 ஆம் பக்கம் பார்க்க)

"என்னைப் போலவே செல்வியும் ஏழெட்டு இடமாக அலைந்து எங்காவது ஒரு ஊரின் மூலையில் இடம்பெயர்ந்து வாழக்கூடும். இல்லையேல் புலம் பெயர்ந்து வெளிநாடொன்றில் இருக்கலாம். சில வேளை யுத்தத்தில் காணாமற் போன, இறந்து போன இலட்சக்கணக்கானோரில் அவளும் அடங்கியிருக்கலாம்: போராளியாகக் கூட மாறியிருக்கலாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணாடி வீடு 1

சஞ்சீவி தொடர்கதை

ரஜிதா அரிச்சந்திரன்







சாலையோரம் அழுதவண்ணம் நின்றிருந்தாள் ஷோபா. அவளை சுற்றிவரவும் வாகனங்கள் மின்னல் வேகத்தில் சென்று கொண்டிருந்தன. அதேபோலத் தான் அவளின் வாழ்வும் மின்னல் போல ஒரு விபத்தினால் நிலைகுலைந்து விட்டது. அவள் மழையில் தெப்பமாக நனைந்திருந்தாள். அவளின் மனதும் நினைவலைகளால் பின்னப்பட்டு கடந்தகாலத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்ததது. ஷோபாவின் தாய் ஒரு ஆசிரியை. தந்தை வெளிநாட்டில் உழைத்துக் கொண்டு வந்து இங்கே வாகனம் ஒன்றினை வாங்கி வைத்திருந்தார். தந்தை வரதன் மிகவும் இனிமையானவர். அவர் எப்பொழுதும் ஷோபாவையும் அவளின் அம்மாவையும் மிகவும் அன்பாகப் பார்த்துக் கொள்வார். இப்படியாக அமைதியாகவும் மென்மையாகவும் சென்றுகொண்டிருந்த அவர்களின் வாழ்வில் கொரோனா எனும் புயல் வட்டமிட்டு சுழற்றியடித்து சேதப்படுத்தியது.

திடீரென்று தடிமன், காய்ச்சல், மூச்சுத் திணறலால் பாதிக்கப்பட்ட வரதன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதும் அவருக்கு கொரோனா தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. கொரோனா தொடர்பான 'ரெஸ்ற் றிப்போட் ' வரும் வரையில் ஷோபாவும், தாய் ஆனந்தியும் வைரவர் கோயில் வாசலில் அழுது கொண்டிருந்தார்கள். ஆனந்தியின் தொலைபேசி ஒலித்தது. பேரதிர்ச்சி காத்திருக்கின்றது என்று அறியாமல் அதனை ஆன்ஸர் பண்ணினாள் ஆனந்தி.

" வணக்கம் அம்மா, நாங்கள் ஹொஸ்பிட்டலிலயிருந்து கதைக்கிறம். நீங்கள் வரதனின் மனைவியா? "

"ஓம்! சொல்லுங்கோ "

"உங்களுடைய கணவனுக்கு கொவிட் பொஸிட்டிவ் எண்டு வந்திருக்கு"

அதைக் கேட்டதும் உலகமே உருண்டு அவள் மீது விழுந்ததைப் போல வலியினை அனுபவித்தவள் அப்படியே நிலத்தில் சரிந்துவிட்டாள். ஷோபாவுக்கோ ஒன்றுமே புரியவில்லை.

" அம்மம்மா... அம்மம்மா.. ஓடியாங்கோ "எனக் கத்திக்கொண்டு கோயிலிலிருந்து ஓடிவந்தாள்.

"என்ன ஷோபா? என்ன?" என்ற அம்மம்மாவை இழுத்துக்கொண்டு கோயிலை நோக்கி ஓடினாள். கோயிலில் மயங்கிக் கிடந்த ஆனந்தியை , அம்மம்மா தண்ணீர் தெளித்து எழுப்பினாள். மயக்கம் தெளிந்த ஆனந்தி தாயைக் கட்டிப்பிடித்து அழுதாள். "என்னம்மா ஏன் அழுகிறாய்? என்ன நடந்தது?"

"அம்மா அவருக்கு கொவிட் பொஸிட்டிவாம். எங்களுக்கு வீட்டுக்கு நோட்டீஸ் ஒட்டப்போறாங்கள் .என்ன செய்ய?" என ஏக்கத்தில் புலம்பினாள் ஆனந்தி.

"சரி கவலைப்படாதை, கடவுள் பார்த்துக் கொள்ளுவான். வா வீட்டை போவோம்"

மூவரும் வீட்டை நோக்கிப் போக, மருத்துவமனை அம்புலன்ஸ் வந்து இவர்களை ஏற்றிச் சென்றது. இவர்களுக்கும் கொவிட் பரிசோதனை செய்தனர். ஆனந்தியின் தாய்க்கு பொஸிட்டிவ் எனக் கூறி அவரையும் அங்கு தனிமைப்படுத்தினர். ஷோபாவையும் ஆனந்தியையும் வீட்டில் கொண்டுவந்து, 'நீங்களும் பதினான்கு நாள்களுக்கு வெளியில் செல்லமுடியாது' எனக் கூறிச் சென்றனர். அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. இருவரும் வீட்டில் இருப்பதை வைத்துச் சாப்பிட்டார்கள். சாப்பிட பசியும் இல்லை , என்ன செய்ய? பெரும் கவலையில் ஆழ்ந்திருந்த அவர்களுக்கு உதவ சொந்தங்கள் யாரும் முன்வரவில்லை. ஆனந்தியின் நண்பர்கள் சிலர் கருணை கொண்டு பொருள்களை வாங்கிவந்து கொடுத்தார்கள். இப்படியாக ஒருவரை ஒருவர் பார்க்காமல் கவலையிலிருந்த அவர்களுக்கு இடி விழுந்தது போல வந்தது ஒரு செய்தி.

ஆனந்தியின் தாய் இறந்துவிட்டார், ஆனாலும் யாரும் செல்லமுடியாது, ஆஸ்பத்திரிக்காரர் தாம் தான் அவரை அடக்கம் செய்வோமென அறிவித்தனர். ஆனந்தி அழுதாள்; குமுறினாள்; சகோதரங்களுக்கு தொலைபேசியில் அறிவித்தாள். அவர்களும் என்ன செய்வார்கள்? வெளிநாடுகளிலிருந்து வரமுடியாது. அங்கும் இதே நிலைதானே.'என்னசெய்ய?'என்றே அழுதார்கள், ஆறுதல் கூறினார்கள். வரதனின் நிலையும் மோசமாக இருந்தது. மூச்சுத்திணறல் அதிகம். 'கொஞ்சம் கஸ்ரம்தான்' என செய்தி வந்தது. ஒரு இடத்தில் உட்கார்ந்து எழும்பவே முடியாதபடி மறுபடியும் தொலைபேசி அழைப்பு. 'உங்கள் மனதைத் திடப்படுத்துங்கள். உங்கள் கணவர் இறந்து விட்டார் ' அவ்வளவும்தான். ஆனந்தி மயங்கிவிழுந்தாள்.

ஷோபா அழுதபடி தண்ணீர் தெளித்து எழுப்பினாள்.

"அப்பா எங்களை விட்டுப் போய்விட்டார் " என மகளைக் கட்டிப்பிடித்தபடி ஆனந்தி கதறினாள். ஷோபாவும் கதறினாள். இப்படியாக முப்பத்தொரு நாள் கழிந்தது. வெளியில் வந்தார்கள். இவர்களைக் கண்டு பயந்த அயலவர்கள் அவர்களுடன் பேசுவதைத் தவிர்த்தார்கள். ,கொரோனாவுடன் மரணம் இலவச இணைப்பு என நினைத்து, அவர்களுக்கு பயம் வரும் தானே?

(தொடரும்)



# ஊர்ப்புதினம் 01

இராகவன்





ஊர்ப்புதினம் முதலாம் பாகம் முடியேக்குள்ள பிறிதொரு சந்தர்ப்பத்தில் சந்திப்பம் எண்டு சொல்லியிருந்தனான். இப்பதான் கனநாளைக்குப் பிறகு அந்தச் சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. இனி ஒவ்வொரு கிழமையும் தவறாமல் சந்திக்கலாம். நிறையச் சங்கதியள் கதைக்கிறதுக்கு இருக்கு. சரி இனி விசயத்துக்கு வருவம்.

இப்ப கிட்டடியில எங்கட சிவாப்பெரியப்பாவுக்கு ஊரில விழா எடுத்துக் கொண்டாடிப் புத்தகமும் வெளியிட்டவையெல்லோ? நான் கனநாள் கழிச்சு உங்களச் சந்திக்கிறதால நீங்கள் சிலவேளை சிவாப்பெரியப்பா எண்டு சொல்லேக்குள்ள குழம்பினாலுமெண்டு கொஞ்சம் விவரமாச் சொல்லுறன்.

முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினரும் உடுப்பிட்டிச் சிங்கம் எண்டு செல்லமாக அழைக்கப்படுபவருமான மு.சிவசிதம்பரம் தான் அந்தச் சிவாப்பெரியப்பா. ஊர்ப்புதினத்தில முந்தியொருக்கால் சிவாப்பெரியப்பாவின்ர குலதெய்வம் கிராய்ப் பிள்ளையார் (வெல்லனிற் பிள்ளையார்) எண்டும் ,அவரின்ர வளவுக்குள்ள நிண்ட நாலு பெரிய தேக்கமரங்களையும் அந்தக் கோயில் தேர்க்காலுக்கெண்டு நேர்ந்து விட்டிருந்தவர் எண்டும் ,பிறகு அந்தத் தேக்கமரங்களுக்கு என்ன நடந்ததெண்டதுக்கு ஒரு தனிக்கதை இருக்கெண்டும் சொல்லியிருந்தனான். அந்தத் தனிக் கதைக்கு இப்ப வருவம்.

சிவாப்பெரியப்பா வீடும் எங்கடை பெரியம்மா வீடும் (அம்மாவின்ர மூத்த தமக்கை) பக்கத்துப் பக்கத்து வீடுகள் எண்டதால 1990 களுக்குப் பிறகு இயக்க ஆக்கள் வந்து ரண்டு வீட்டையுமெடுத்து முகாமிட்டிருந்தவை. அவையள் ஒரு வரியத்துக்கு மேல இருந்திருப்பினம். அங்கையிருந்து வெளிக்கிடேக்குள்ள அவையள்தான் அந்தத் தேக்கமரங்களை அடியோட தறிச்சுத் துண்டுபோட்டு ஏத்திக்கொண்டு போனவை. பிறகு அந்த வீடுகளில இருந்தாக்களின்ற கதையளையும் ஓரளவுக்குச் சொல்லியிருக்கிறன்.

2003 காலப்பகுதியில சிவாப்பெரியப்பா காலமானார். அப்ப அவர் தேசியப் பட்டியல் எம்.பியா இருந்தவர். கொழும்பிலயிருந்து இயக்க ஆக்களின்ர ஏற்பாட்டில அவரின்ர உடலைக் கொண்டு வந்து வன்னியில வைச்சு அஞ்சலியெல்லாம் செலுத்தி நாட்டுப்பற்றாளர் விருதும் அறிவிச்சு , இந்தக் கரவெட்டி வீட்டுக்குக் கொண்டு வந்து செத்தவீடு கொண்டாடி, சோனப்புச் சுடலையிலதான் அவரைத் தகனம் செய்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்




K. ஆத்மிகா,
தரம் - 6
சென்.திரேசா பெண்கள் கல்லூரி



சு.ஆருஷன்,
தரம் - 3B
யா/செட்டித்தெரு மெ.மி.த.க. பாடசாலை




சு அபிஷேக்
இணுவில்
சிவகாமி
அறநெறிப்பாடசாலை



ஜெகன் யதுசன்
தரம் - 9
யா/ வேலாயுதம் மகா வித்தியாலயம்



ஜெகன் யதுசன்
தரம் - 9
யா/ வேலாயுதம் மகா வித்தியாலயம்



தேனுயா,
தரம் - 10
கிளி/ பூநகரி மத்திய கல்லூரி.



## முயற்சி பயன்தரும்

தவளைகள் கூட்டமொன்று காட்டுவழி பயணித்துக் கொண்டிருந்தது. திடீரென அந்தக்கூட்டத்தில் இரண்டு தவளைகள் மட்டும் அந்தக் காட்டில் இருந்த பாதாள குழியில் தவறி விழுந்துவிட்டன.

செய்வதறியாது திகைத்து குழியின் பாதி வழியில் சிக்கித் தவித்தன அந்தத் தவளைகள்.

தங்கள் கூட்டாளிகள் காப்பாற்றுவார்கள் என்று அந்தத் தவளைகள் எண்ணின. குழியின் மேல் சுற்றி நின்ற தவளைகள் குழியின் ஆழத்தை நன்றாக நோட்டமிட்டன. அந்தக் குழியோ படுபயங்கர ஆழமாக இருந்ததால் அவைகளும் பயந்துவிட்டன.

உள்ளே விழுந்த தவளைகள்வேகமாக தவ்வி மேல வர முயற்சித்துக்கொண்டிருந்தன.

மேல இருந்த இரு தவளைகளும் பிழைக்க வழியில்லை என்று முடிவு செய்து சத்தமாக கதற ஆரம்பித்தன.

ஆனால் தீராத முயற்சியால் ஒரு தவளை மட்டும் சட்டென மேலே வந்தது. அதிர்ச்சியாய் மற்ற தவளைகள்... "எவ்வாறு நீ தப்பினாய்???" எனக் கேட்டன.

அந்தத் தவளையோ "எனக்கு இரண்டு காதுகளும் கேட்காது.. நீங்கள் அனைவரும் என்னைத் தப்பித்து மேலே வருமாறு உற்சாகப்படுத்தியதால் மட்டுமே நான் பிழைத்தேன். ஆதலால் அனைவருக்கும் நன்றி" என கூறிவிட்டு தன் பயணத்தைத் தொடர்ந்தது.

**நீதி: சில நேரங்களில் மற்றவரின் பேச்சைக் கேட்காமல் எம் முயற்சியை மட்டும் நம்புவதே நலம்!**



## பச்சோந்தி

பச்சோந்தி எதிரிகளிடமிருந்து தப்பிப்பதற்காக இயற்கை அதற்குச் சிறப்பான அம்சத்தை வழங்கியிருக்கிறது.

பச்சோந்தி புல்வெளியில் இருந்தால் பச்சை நிறத்திலும் மரத்தின் மீது இருந்தால் பழுப்பு வண்ணத்திலும் மண் மீது இருந்தால் மண் நிறத்திலும் உடலின் நிறம் மாறும். அதாவது இடத்துக்கு ஏற்ற மாதிரி பச்சோந்தியின் உடல் வண்ணமும் மாறும்.

இதனால், எதிரிகளின் கண்களுக்குப் பச்சோந்தி எளிதில் புலப்படாது. நிறம் மாறும் இயல்பு பச்சோந்திக்குச் சாதகமான அம்சமாக இருக்கிறது.

## நிரப்புவோம்

8 – 2 =

5 – 3 =

7 – 3 =

8 – 1 =



## மாணவர்களே!

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமிலி என்றொரு பெருங் கவிஞை

○ கோகுலராகவன்

எமிலி டிக்கின்சன் (Emily Dickinson) ஓர் அமெரிக்கப் பெண் கவிஞர். 18 ஆம் நூற்றாண்டில் புதிய கவிதை வடிவம் ஒன்றை உருவாக்கக்கூடிய முறையில் கவிதைகள் எழுதினார். ஆங்கிலக் கவிதைகளில் புதுக்கவிதை எழுதும் முறையைத் தொடங்கிய கவிஞராக எமிலி கருதப்படுகின்றார்.

மனிதனின் மரணம் அவன் வாழ்வை முடிவுறுத்திய பின் எதுவும் இல்லை என்பதை எமிலி தன் கவிதைகளில் அதிகம் வெளிப்படுத்தி இருக்க காரணம் அவரது வீடு ஓர் இடுகாட்டுக்குப் பக்கத்தில் இருந்தமையே . எமிலி இறுதி வரை தனிமையில் வாழ்ந்தவள். இறுதிக் காலத்தில் தன் படுக்கை அறையை விட்டு வெளிவராது இருந்திருக்கிறாள்.



## இருந்து கதைப்பம்

எமிலி தன் வாழ்நாளில் திருமணம் செய்து கொள்ளவில்லை.

ஆனால் சூசன் என்கிற பெண்ணுடன் அவளது நட்பு நெருக்கமானது. சிலவேளை சூசன் எமிலியின் காதலியாக இருக்கலாம் என்கின்றனர். இதனை நம்பும்படியாக பல கவிதைகள் சூசனுக்கு சமர்க்கப்பட்டவையாக இருக்கின்றன.

எமிலி இரண்டாயிரம் கவிதைகள் வரை எழுதி இருக்கின்றார். தன் காலத்தில் அவள் அவற்றை வெளியிட்டதாக இல்லை. அவளது மரணத்தின் பின் தற்செயலாக அவளது சகோதரி ஒரு பெட்டியில் கண்டெடுத்த பின்னரே இந்த உலகம் எமிலியின் கவிதைகளை வாசித்து அனுபவிக்க முடிந்தது.



கவிதைகளை விட எமிலி கடிதம் எழுதும் அழகே தனி .தன் ஆசிரியருக்கு அவள் எழுதிய கடிதங்கள் மிக உன்னதமானவை.

எமிலி கவிதைகள் ஒரு போதும் மையத்தை விட்டு விலகாது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாக எமிலியின் ஒரு கவிதையை பார்ப்போம். இதன் அழகியல் வெளிப்பாடு அருமையானது. ஒரு பறவையோடு ஒரு பொழுதைக் கழிப்பது எவ்வளவு இனிமையானது என்கிறார் எமிலி.

## நடை பயிலும் பறவை

*ஒரு பறவை சுவரில் இறங்கி வருகின்றது.*  
*நடை பயில*  
*என்னை அது காணவில்லை.*  
*அது ஒரு புழுவை அலகால் கொத்தி*  
*பச்சையாக உண்கிறது.*  
*புல் மேல் உறைந்திருந்த*  
*பனித்துளியை உறிஞ்சிக் குடிக்கிறது.*

*சுவரில் பக்கவாட்டாக துள்ளி துள்ளி*  
*ஒரு வண்டை போல நடக்கிறது.*  
*கண்களால் வேகமாக சுற்றிப் பார்க்கிறது.*  
*அதன் கண்மணிகள் மிரண்டு தெரிகின்றன.*  
*'வெல்வெட்' கழுத்தை*  
*நாலாபுறமும் சுழற்றுகிறது.*  
*ஆபத்தில் இருக்கும் ஒருவரைப்போல*  
*எச்சரிக்கை கொள்கிறது.*  
*நான் ஒரு உணவுத்துண்டை*  
*அதற்குப் போடுகிறேன்.*  
*அது தனது இறகுகளை விரித்து*  
*தன் மென்மையான வீட்டை நோக்கிப் பறக்கிறது.*  
*ஒரு வள்ளம் கடலில்*  
*வேகமாகப் போவதை விடவும்*  
*ஒரு வெள்ளி மடிப்பு போல*  
*ஒரு பட்டாம்பூச்சி போல*  
*மதிய நேரத்தில் ஆற்றங்கரையில்*  
*சலனமின்றிப் பறக்கிறது.*

ஆங்கில மூலம்:எமிலி டிக்கின்சன்
தமிழில் :கோகுலராகவன்.

○ குருமன்காட்டாள் வன்னிகா




# போதையால் அழியும் சிறுவர்கள்

வடக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் போதைக்கு அடிமையாகி வரும் நிலைமை அதிகரித்து வருகிறது.

கடந்த 2 மாத காலப்பகுதிக்குள் மாத்திரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் போதைக்கு அடிமையான 33 சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 11 பேர் ஹெரோய்ன் போதைப் பொருளுக்கும், 08 பேர் ஐஸ் போதைப்பொருளுக்கும், 07 பேர் கஞ்சா போதைப்பொருளுக்கும் ஏனையவர்கள் போதை மாத்திரைகளுக்கும் அடிமையாகி உள்ளனர்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் ஓகஸ்ட் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் அதிகாரிகளால் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்கள் இவ்வாறு போதைப்பொருளுக்கு அடிமையாவதன் மூலம் அவர்கள் தமது கல்வியை இழப்பதுடன் சிறுபராயத்திலேயே குற்றச் செயல்களில் ஈடுபட்டு, குடும்பங்கள் மற்றும் சமூகத்தின் அமைதி, அபிவிருத்தி ஆகியவற்றை உருக்குலைக்கின்றனர். அவர்கள் சகலவிதமான ஆரோக்கியங்களையும் இழந்து மலட்டுத் தன்மையையும் அடைவதாக மருத்துவ அறிக்கைகள் கூறுகின்றன.

போதைக்கு அடிமையான சிறுவர்களைக் கையாள்வது சம்பந்தப்பட்ட குடும்பத்தினருக்கும் அந்தச்சிறுவர்கள் படிக்கும் பாடசாலைகளுக்கும் மிகவும் சவால்மிக்க பிரச்சினைகளாகும். பாடசாலையைப் பொறுத்தவரையில் இவ்விடயம் ஏனைய ஒழுக்கம் மிக்க மாணவர்களின் கல்வி, நடத்தை முதலியவற்றையும் எதிர்பாராத பாதிப்புக்குள்ளாக்கும். இந்தச்சிறுவர்களுக்கு உரிய வகையில் புனர்வாழ்வு கொடுத்தல் வேண்டும்.

இலங்கையில் 18 வயதுக்குக் குறைந்த சுமார் ஒரு லட்சத்து 15 ஆயிரம் சிறுவர்கள் போதைப்பொருள்களுக்கு அடிமையாகி உள்ளனர் என்று 2019 இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டது.

போதைப்பொருள் தொடர்பிலான ஜனாதிபதி செயலணி, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபை மற்றும் பொலிஸார் ஒன்றிணைந்து 2019 இல் மேற்கொண்ட இந்த ஆய்வில் இந்தத் தகவல் கண்டறியப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள் விநியோகஸ்தர்கள், ஆரம்பத்தில் இலவசமாக போதைப்பொருள்களை வழங்கி, அவர்களை அடிமைப்படுத்தி விடுகின்றனர் என்பது ஆய்வில் அறியப்பட்டது.

இலவசமாக போதைப்பொருளைப் பெறுகின்ற சிறுவர்களுக்கு, ஒரு கட்டத்தில் இலவச விநியோகம் நிறுத்தப்படுவதாகவும், அதனையடுத்து அவர்கள் பணம் கொடுத்து போதைப்பொருள்களை வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்படுவதாகவும் அறியப்பட்டது.

எனவே, போதைப்பொருளை வாங்குவதற்கான பணத்துக்காக, சிறுவர்கள் திருட்டு உள்ளிட்ட சட்ட விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்பதும் அறியப்பட்டுள்ளது.

போதைப்பொருள் விற்பனையும், சிறுவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாதலும் சுற்றுலாப் பிரதேசங்கள் மற்றும் அவற்றின் அண்மை [illegible] அதிகமாகக் காணப் [illegible] அவதானிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள சுற்றுலாப் பிரதேசங்களான அறுகம்பே, பாசிக்குடா ஆகிய இடங்களிலும், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஹெரோய்ன் உள்ளிட்ட போதைப்பொருள் விற்பனை அதிகமாகக் காணப்படுவது இதற்கு உதாரணமாகக் கூறப்படுகிறது. வடக்கிலும் அத்தகைய நிலைமை ஏற்பட்டுள்ளது.

2019 இல் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் 18 வயதுக்குக் குறைந்த சிறுவர்களில் சுமார் 6,100 பேர் ஹெரோய்னுக்கு அடிமையாகியுள்ளனரென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாளொன்றுக்கு சுமார் ஒரு லட்சம் வரையானோர் ஹெரோய்னைத் தேடி அலைவதாகவும், அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகையோரில் 1,500 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வி ,அபிவிருத்தி ஆகியவற்றின் இழப்பைவிட, குடி, போதை, புகைத்தல் முதலியன, "பாலியலில் வெம்பிப்போன சமூக அவலங்களை" உற்பத்தி செய்கின்றன. இந்த இளம் சமுதாயமே அடுத்த தலைமுறையை உருவாக்கும் போது அவை சமூக மதிப்பீட்டையும் ஒழுக்கத்தையும் மறுக்கின்றன. இவை எல்லாவற்றிலும் அலட்சியம், கோமாளித்தனம் என்று வாழ்வின் அர்த்தத்தையே மறுத்து பொம்மையாக வெளிறவைத்துவிடுகின்றன.

கழிசடைப் பண்பாடுடைய "மிருக வாழ்க்கையொன்று" அறம், ஒழுக்கம், சட்டம் முதலியவற்றை இல்லாதொழிக்கும்.

தனிமை, அவலமான வாழ்க்கை ஆகியவை போதைக்குள் மெய்மறந்த கட்டற்ற, உணர்வற்ற ஜடத்தனத்தை ஏற்படுத்துகின்றன.


இளைய சமுதாயம் சமூக விழுமியங்களைக் கைவிட்டுப் போதையில் சிக்க, குடும்ப உறவுகளின் சிதைவுகளே தூண்டுகோலாக உள்ளன. சமுதாயத்தில் சுரண்டும் வர்க்கம் தனது நலன் சார்ந்து சமூக அமைப்பை ஒழுங்குபடுத்த, அவை குடும்ப அமைப்பையே தனித்தனி உலகமாக்குகின்றன. இது சமூகக் கூட்டை மறுத்துச் செயலாற்றும் போது ஆண்கள் தற்கொலை, பெண்கள் பாலியல் ஒழுக்கமீறல், குழந்தைகள் போதை என்று எல்லாமுமாகச் சிதைகின்றன.

தற்பொழுது இலங்கையில் பொலிஸ் மற்றும் முப்படை அலுவலர்கள், சிறைச்சாலை அதிகாரிகள், சிறைக்காவலர்கள் முதலிய தரப்பினர் தாம் போதை வஸ்துகளுக்கு அடிமையாகாமல், போதை வஸ்து மாபியாக்களின் வியாபார அல்லது மோசடி வலைப்பின்னல்களுக்குள் சிக்காமல் மக்களைப் பாதுகாப்பது அடிப்படை விடயமாகும். இவ்விடயத்தில் நாட்டின் தலைமை உடன் அக்கறையும் கவனமும் எடுக்கவேண்டும்.

நாட்டின் கடல் வழியாகவும் வான் வழிப் போக்குவரத்தினூடாகவும் நாட்டிற்குள் போதைப் பொருள்கள் கடத்தப்படுவதை முற்றிலும் தடுப்பதில் பாதுகாப்புப் படைகள் நேர்மையாகச் செயற்பட்டு நாட்டைப் பாதுகாக்கவேண்டும்.


ஏற்கனவே பாதுகாப்புப் பலவீனங்கள், மற்றும் ஊழல் ,மோசடி, லஞ்சம் முதலியன காரணமாக உள் நுழைந்த போதைப் பொருள்களைத் தேடிக் கண்டு பிடித்து அழிப்பதிலும் குற்றவாளிகளைக் கைது செய்வதிலும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்விடயங்களில் மாகாணங்களின் ஆளுநர்கள், மாவட்ட அரசாங்க அதிபர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் போதிய நடவடிக்கைகளை விரைவாக எடுக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துளிக்கதை

# இயற்கை ஆர்வலர்



○ நீதுஜன் பாலா

மரணமடைந்த விவேக் சொர்க்கத்துக்குப் போனார்.
"வாருங்கள் வாருங்கள்..." என்று சித்திரகுப்தன் வரவேற்றான். "இயற்கை ஆர்வலர் செக்.ஷனுக்கு இவரை அழைத்துப் போ..!" என்று கறுப்புப் பாவாடை போட்ட ஏவலாளிடம் கட்டளை இட்டான்.
அவனும் வணக்கத்துடன் விவேக்கை அழைத்துப் போனான். "உங்கள் வாழ்நாளில் ஏறத்தாழ முப்பது லட்சம் மரங்களை நாட்டி இருக்கிறீர்கள். அதற்குப் பலனாக, எந்நேரமும் குளிர்ந்த காற்று வீசும், தேன்சுவைக் கனிகள் உதிரும் அற்புதமான சோலைவனத்தை உங்களுக்கு ஒதுக்கி இருக்கிறோம்...." என்றான்.
அடடா.. "முப்பது லட்சம் மரம் நட்ட எனக்கே இப்படி என்றால், மூன்று கோடி மரம் நட்ட வங்காரி மாத்தாய்க்கு?" என்று கேட்டார்.
"நட்ட மரங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வசதிகள் கொடுக்கப்படும்.. உங்களுக்கு எட்டாம் நம்பர் சோலை.. கென்யா நாடு முழுவதும் மூன்று கோடி மரங்கள் நட்ட வங்காரிக்கு இரண்டாம் நம்பர் சோலை..."
"என்ன, அவருக்கே இரண்டாம் நம்பர் தானா? அப்போ முதலாம் நம்பர் சோலையில் யார் இருக்கிறார்கள்?"
"இயற்கை ஆர்வலர் சங்கமித்தை"

# புலர்காலையின்...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களைத்த கொக்குகள் வளைய வரும் மாடுகளின் மீது அமர்ந்து காற்று வாங்கிக் கொண்டிருக்கும். உரப்பாவனை வந்த போது குஞ்சரப்பா அதனை எதிர்த்தார். 'தண்ணீர் நஞ்சாகப்போகுது. மரக்கறிகளைத் திண்டு மக்கள் வயிறு வெடித்துச் சாகப் போகிறார்கள்' என்றெல்லாம் கத்தினார். எங்கள் ஊரில் செல்லக்குட்டிதான் முதலில் உரத்தைப் பாவித்தார். மரவள்ளிக் கிழங்குகள் உரத்தில் திளைத்து தொடையளவு இருந்தன. மற்ற மரக்கறிகளும் அப்படித்தான். அதற்காக அவருக்கு 'விவசாய மன்னன்' பட்டமும் கிடைத்தது. செல்லக்குட்டி குஞ்சரப்பாவை "பழைய பஞ்சாங்கம்" என்றே அழைத்தார். பலரும் அவரைப் போலவே ஏசினர். "விசர்க் கிழவன்.. கட்டையில போற வயதில திட்டிக் கொண்டு திரியுது." என்றுதான் செல்லக்குட்டி தனது எரிச்சலை வெளிப்படுத்தினார். அதன் பிறகு, மெல்ல மெல்ல உரமும் மருந்துகளும் அநேகமான தோட்டங்களுக்கு வந்து விட்டன. செண்பகங்களும் மைனாக்களும், காகங்களும் வீழ்ந்து இறப்பது அதிகரித்தது. அதிலும் முந்திரிகைத் தோட்டங்கள் வந்த பின்னர் இந்தத் தொகை மேலும் கூடியது.
"துலைவான்கள்.. நன்றி கெட்டவன்கள்... இந்தப் பச்சைப் பறவையைக் கொல்லுறான்கள்... உவங்கள் நல்லாய் இருக்க மாட்டாங்கள்" குஞ்சரப்பா ஆத்திரம் மிகுந்து பல தடவை கத்தியிருக்கிறார்.
கொஞ்சக் காலத்தில் எங்கள் பகுதியில் யுத்தம் தொடங்கியது. அடிக்கடி குண்டுகளும் ஷெல்களும் வெடித்தன. துப்பாக்கிகளும் முழங்கின. இராணுவத்தினரும், போராளிகளும் திடீர் திடீர் என மோதிக் கொண்டனர். சத்தம் கேட்டு ஓடுவதும், அது அடங்கியதும் மீண்டும் வருவதுமாகப் பொழுது கழிந்தது.
"சீ....சீரழிஞ்ச வாழ்க்கை" குஞ்சரப்பா சலித்துப் பேசினார். திடீரென்று ஒரு நாள் அட்டாளைப் பலகையில் சாய்ந்து தூங்கியவர் அப்படியே இறந்து போனார். ஒரு மாரித்தவளையின் மரணமாகவே செல்லக் குட்டியும் வேறு பலரும் இதனைக் கருதினர். அவரது உடலை எரித்து விட்டு வந்த மறுநாளே நாங்கள் எங்கள் கிராமத்தை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று.
அன்று அதிகாலையிலே ஷெல்கள் வீழ்ந்து வெடித்துக் கிலி கொள்ளச் செய்தன. படுக்கையிலிருந்து துடித்தெழுந்து ஊர் முழுவதுமாகக் கலவரப்பட்டு ஓடினோம். அம்மன் கோயிலடியில் போய் நின்றோம். செல்வி கூட அங்கு நின்றிருந்தாள். கலவரத்தோடு மிரளும் விழிகளை உருட்டியபடி இருந்தாள். கடைசித் தங்கையை இடுப்பில் தூக்கி வைத்தபடி அங்குமிங்கும் திரிந்தாள். எனக்கோ தூக்கக் கலக்கம். ஆலமர வேரில் சாய்ந்தபடி உறங்கி விட்டேன். கிராமத்தை விட்டு வெளியேறுமாறு இராணுவத்தினர் வானொலியில் அறிவிப்பதாகச் சொன்னார்கள். ஹெலிகொப்டரில் இருந்து வெளியேறக் கோரும் துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன. தருமு அதனைப் பொறுக்கி வந்து ஆலாபனை பண்ணினான்.
சண்டை ஓய்ந்திருந்த வேளை வீட்டுக்கு வந்து அகப்பட்ட பொருட்களை எடுத்துக் கொண்டிருந்தோம். அப்போது மீண்டும் ஷெல்கள் வெடித்தன. எடுத்த பொருட்களுடன் மீளும் போது சடாரென வெடித்த ஷெல் செவிப்பறையில் மோதி 'ங்....ங்...'.என அறைந்து கொண்டிருந்தது. முத்தர் வீட்டுப் பனை வளவில் அதன் புகையும் மணமும். அந்த அகால வேளையிலும் குயிலொன்று ஒற்றைக் குரலில் கத்திக் கொண்டிருந்தது. ஒருவாறாக தப்பி ஓடி வந்து, ஒவ்வொரு இடமாக அலைந்து ஒவ்வொரு சண்டைகளுக்குள்ளும் அகப்பட்டு...இந்தப் பத்தாவது வீட்டில் வாழ வேண்டியதாயிற்று. அந்த நாளில் இருந்து செல்வியைக் காணவில்லை. செண்பகங்களைக் கூட பார்த்த ஞாபகமில்லை. வேறு பலவற்றைக் கூட மீண்டும் பார்க்கக் கிடைக்கவில்லை, வார இறுதி நாட்களில் நாங்கள் ஒட்டும் சூத்திரம்... கண்ணப்பரின் லாவகமான கயிறிழுப்பில் மூசியோடும் செங்காரிக் காளைகளும், அதன் பின்னால் ஓடும் ஒற்றைத் திருக்கல் வண்டியும்... உடையார் வீட்டு மூலையில் சிறிய மண்ணிறமான தண்ணிக் குட்டிப் பழங்களைக் குலை குலையாகத் தரும் மரம்... இன்னும் இன்னும், கூடவே நினைவில் மட்டும் நிற்கும் மனிதர்கள். எங்களூருக்குப் போகவே முடியவில்லை. உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருக்கும் அதற்குள். இனிமேல் போகலாமென்ற நம்பிக்கையும் பொய்த்து விட்டது. எங்கள் வீடுகளை உருத்தெரியாதவாறு பற்றைகள் மூடியிருப்பதாகச் சொல்கிறார்கள். குஞ்சரப்பாவின் துருப்பிடித்த சூத்திரத்தில் கூட கொவ்வைக் கொடிகள் படர்ந்திருக்கக் கூடும். செல்வியைப் போல பார்வையிலிருந்து மறைந்த பலருள்ளும் எங்காவது ஒரு மூலையில் உயிருடனிருக்கும் ஒவ்வொருவரும் என்னைப் போல இப்படி இருந்து தனது கிராமத்தை நினைக்க கூடுமோ? 'எங்கள் கிராமமோ? அது என்றோ இல்லாமல் போய் விட்டது. கோழியிலிருந்து பிடுங்கி எறியப்பட்ட இறகு போல நாங்கள் அதிலிருந்து விலகிவிட்டோம். அதை மறக்க வேண்டியதுதான். முடியாவிடினும் அதுதான் நியதி. யாராவது அருள் கூரும் வரை அதுதான் நிலைமை. அதை விடுவோம்.' சோம்பலை முறித்து பாயில் எழுந்து உட்கார்ந்த போது தலை கனத்தது. தூரத்தே செண்பகத்தின் மத்தளவோசை தேய்ந்து ஒலிக்கிறது. இந்தச் செண்பகங்கள் எனது ஊரின் பனை மரங்களுக்குக் கீழே விழுந்து குவிந்திருக்கும் ஓலைகளைக் கிளறி, புழுக்களைப் பொறுக்கிக் கொண்டிருக்கக் கூடுமோ? ■

# சிதறடிக்கப்படும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றைக்குமே சாத்தியப்படப் போவதில்லை. தமிழ்மக்கள் மத்தியில் மட்டுமல்ல இந்தப்பூமியில் எந்த ஒரு மக்கள் கூட்டத்தையும் அவ்வாறு புனிதமான அளவுகோல்களின் அடிப்படையில் நிறுவனமயப்படுத்த முடியாது.
இது மக்கள் இயக்கங்களுக்கு மட்டுமல்ல மத நிறுவனங்களுக்கும் பொருந்தும். உலகில் உள்ள எல்லா மத நிறுவனங்களிலும் அதன் மூலப் புத்தகங்களில் உள்ள புனிதமான அம்சங்கள் பேணப்படுகின்றனவா? மதங்களில் மட்டுமல்ல மதங்களை நிராகரித்த இடதுசாரி இயக்கங்கள் மத்தியிலும் அதே பிரச்சினை உண்டு.
மக்களை நிறுவனமயப்படுத்தும் பொழுது அந்த மக்கள் மத்தியில் இருக்கும் பலங்களை மட்டுமல்ல,பலவீனங்களையும் சேர்த்து நிறுவனமயப்படுத்தாமல் இருப்பது என்பது மிகவும் சவால் மிகுந்தது. ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் இருக்கும் பலவீனங்களையும் ஏற்றுக் கொண்டு அவர்களை நிறுவனமயப்படுத்திய பின் தலைமை தாங்கும் பொறுப்பில் இருப்பவர்கள் அந்தப் பலவீனங்களை படிப்படியாக அகற்ற வேண்டும். அதுதான் நடைமுறைச் சாத்தியமானது. தமிழ்மக்கள் மத்தியில் இதுவரையிலும் தோன்றிய எல்லா ஐக்கியங்களும் எல்லா சிவில் கட்டமைப்புகளும் மக்கள் அமைப்புகளும் அவ்வாறு பலங்களையும்,பலவீனங்களையும் வைத்துக்கொண்டுதான் கட்டியெழுப்பப்பட்டன.புனிதமான கூட்டு என்று எதுவுமே இந்தப் பூமியில் கிடையாது.முழுக்கமுழுக்க கொள்கை ரீதியிலான கூட்டு என்பதும் இந்தப் பூமியில் கிடையாது. தூய தங்கத்தை வைத்து நகை செய்ய முடியாது.தங்கத்தை ஆபரணமாக்குவதென்றால் அதில் செப்பைக் கலக்கவேண்டும்.நாங்கள் அணியும் எல்லாத் தங்க நகைகளிலும் கலப்பு உண்டு என்ற நடைமுறையை ஏற்றுக்கொள்ள வேண்டும். இது அரசியலுக்கும் பொருந்தும்.மக்கள் இயக்கங்களுக்கும் செயற்பாட்டு இயக்கங்களுக்கும் பொருந்தும். தலைமைகள் உறுதியாக இருந்தால்சரி. "ஆயிரம் ஒட்டகங்களுக்கு ஒரு சிங்கம் தலைமை தாங்கலாம். ஆனால் ஆயிரம் சிங்கங்களுக்கு ஓர் ஒட்டகம் தலைமை தாங்க முடியாது. சிங்கமாக இருப்பதா? ஒட்டகமாக இருப்பதா? என்பதனை தமிழ்த் தலைமைகள் தீர்மானிக்க வேண்டும். இல்லையென்றால் புதிய தலைமைகள் மேலெழ வேண்டும். ஏனெனில் தமிழ் மக்களின் கவனக்குவிப்பு திட்டமிட்டுச் சிதறடிக்கப்படுகிறது. தமிழ்மக்களால் ஒருமித்துப் போராட முடியவில்லை. அது அதன் எதிர்மறை விளைவாக ரணில் விக்கிரமசிங்கவின் சிங்கள-பௌத்த வாக்கு வங்கியைத்தான் வளர்க்கும்.தமிழ்மக்கள் சிதறி நின்று போராடினால் அது எதிரிக்கு சேவகம் செய்யும்.திரண்டு போராடினால் அங்கே அதிசயங்களும் அற்புதங்களும் நிகழும். ■

# கவிஞனாக இருக்கிற போது ....



காக்கைகுருவியெங்கள் ஜாதியென்று
ஒரேநொடியில்
எல்லாஜீவன்களோடும்
சமத்துவமாக முடிகிறது.

தொட்டிக்குள்ளிருந்து
துள்ளிப்பாயும் மீனாட்டம்
அண்டம் தாண்டியும்
எகிறிக்குதிக்க இயல்கிறது.

பூக்களைக் காணுகையில்
வண்டாயும்
வண்டுக்கூட்டங்களுக்கிடையே
மகரந்தமாயும்
கூடுவிட்டுக் கூடுபாயும்
வித்தை கைகூடுகிறது.

நட்சத்திரமண்டலத்துள்
நானுமொருவனாயும்
[illegible]
[illegible]

மலர்கள் கிடைக்கிறபோது
வனங்களோடு பேசவும்
வனங்களுக்கிடையே நின்று
மலர்களோடு ஸ்பரிசிக்கவும்

நிலவைச் சுற்றிவளைத்து
அணைத்துக்கொள்ளவும்
உலகோடு
சுற்றிவராமலேயே
பிணைத்துக்கொள்ளவும்
முடியுமாயிருக்கிறது

வானவில்லைத் தொட்டுத்தொட்டு
ஓவியம் வரையவும்
ஓவியங்களுக்குள்ளேயே
வானவில்லைக் கண்டடையவும்

சோலைகள் சேலையோடு
அசைந்து போவதையும்
சேலைகளே
[illegible]தேசக்கொடியென்று
சத்தியம்செய்யவும்

உலகை இரண்டுவரிக்குள்
அடக்கி வைக்கவும்
அணுவைப் பிளந்து
அதற்குள் கவிதைசெய்யவும்

குடையை அப்பால்வீசிவிட்டு
மழையை ரசிக்கவும்
குடைக்குள்ளேயே
மழையை ருசிக்கவும்


மேகங்களோடு பிறரறியாமல்
ஸ்நேகம் செய்யவும்
மோகத்தைக்கூட பிறரறிய
வரிகளால் நெய்யவும்கூட
சாத்தியமாகிறது

சிலவேளைகளில்
கடவுளோடு கதைபேசவும்
கதைகளுக்குள்ளேயே
கடவுளைத் தரிசிக்கவும்கூட
முடிந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முன்றில் 17

○ இயல்வாணன்



பண்டிதர்
ச.வே.பஞ்சாட்சரம்

தமிழிலக்கண, இலக்கிய, சைவசமய அறிவு நிரம்பப் பெற்ற மரபுக் கவிதை கைவந்த வல்லாளர்,பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம். பலநூறு மரபுக் கவிதைகளையும், பிரபந்தங்களையும், சிறுகதை, கவிதை, குறுங்கதை, நாவல் என உரை நடை இலக்கியங்களையும் படைத்த பன்முகப் படைப்பாளியாக இவர் விளங்குகிறார். 1939ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 28ஆம் திகதி இணுவிலில் பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வியை இணுவில் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் (தற்போதய இணுவில் இந்துக் கல்லூரி), இடைநிலைக் கல்வியை உடுவில் மான்ஸ் ஆங்கிலப் பாடசாலையிலும், உயர்தரக் கல்வியை திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியிலும்(தற்போதைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) கற்றார். கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் தொழில்நுட்பக் கல்வியைத் தொடர்ந்தார்.

நாவலர் பாடசாலையில் நடைபெற்ற பாலபண்டித வகுப்பில் கற்றுச் சித்தியடைந்ததுடன் 1967இல் பண்டிதப் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றார். ஆங்கில ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து 1964இல் நாவற்குழி அ.மி.த.க.பாடசாலையில் ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்றார். 1967இல் நல்லூர் ஆசிரிய கலாசாலையில் தமிழாசிரியர் பயிற்சிபெற்று, 1968இல் கண்டி புசல்லாவ திருத்துவக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியேற்றார். தொடர்ந்து புசல்லாவ சரஸ்வதி வித்தியாலயம், இணுவில் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றிலும் கற்பித்து பல நன்மாணாக்கரை உருவாக்கினார். வாணிதாசனின் கவிதைகள் மீதான ஈர்ப்பினால்




தனது 13 ஆவது வயதில் கவிதை படித்த இவர் பரமேஸ்வராக் கல்லூரியில் வித்துவான் க.வேந்தனாரிடம் கல்வி கற்ற காலத்தில் நண்பனுக்கு எழுதிய கவிதை மற்றவர்களால் பாராட்டப்பட்ட போது ஊக்கம் பெற்றார். சக நண்பனான சி.முருகவேள் (பின்னாளில் பேராதனைப் பல்கலைக்கழக நூலகராயிருந்தவர்) கொடுத்த 'காதல்' என்ற தலைப்பிலான ஆங்கிலக் கவிதையை,

*'குன்றின் சாரலில் வழியதனருகில்*
*நின்று சிதைந்த சமாதியின் மருங்கில்*
*அன்றொரு நாள் நான் கழித்ததோர் மணியை*
*என்றும் என் சிந்தையில் தேக்கி மகிழ்வேன்'*

என்று சில நிமிடங்களில் மொழிபெயர்த்துக் கொடுத்து ஆசிரியரின் பாராட்டைப் பெற்றுக் கொண்டார்.

பரமேஸ்வராக் கல்லூரியில் கற்ற காலத்தில் அல்லி சஞ்சிகையில் இவரது முதல் கவிதை 'செந்தாமரை மலரே' என்ற தலைப்பில் வெளிவந்தது. கல்லூரி சஞ்சிகையில் தீந்தமிழீழம் என்ற கவிதையை அன்று (1959) எழுதியமையும் குறிப்பிடத்தக்கது. பாரதிதாசனின் 'எதிர்பாராத முத்தம்' காவியம் தந்த அருட்டுணர்வில் இவரெழுதிய 'எழிலி காவியம்' கலைச்செல்வி ஆசிரியர் சிற்பியின் ஆதரவுடன் செட்டிகுளம் பாலன் பதிப்பக வெளியீடாக 1962 இல் வெளிவந்தது. இந்நூலுக்கு இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. சிற்பி சிவசரவணபவன் ஆசிரியராகவிருந்த கலைச்செல்வி கலை இலக்கிய சஞ்சிகையில் துணை ஆசிரியராக இவர் பணியாற்றினாரென்பதும் குறிப்பிடத்தக்கது. 1963இல் எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரை மட்டக்களப்பில் 3 நாள் முத்தமிழ் விழாவினை நடத்தினார். அந்த விழாவில் நாவற்குழியூர் நடராசன் தலைமையில் ஒரு கவியரங்கம் நடைபெற்றது. மஹாகவி, நீலாவணன், முருகையன், அம்பி, திமிலைத்துமிலன், சில்லையூர் செல்வராசன் ஆகியோருடன் இணைந்து கவிபாடும் வாய்ப்பை எஸ்.பொ.இவருக்கு வழங்கினார். அன்று முதல் இலங்கை முழுவதும் எண்ணற்ற கவியரங்குகளில் இவர் பங்குபற்றித் தன் கவித்திறத்தால் சபையைக் கட்டி வைத்திருக்கிறார்.( இவரது தலைமையில் கவிதை பாடும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது பேறே) இவரது கவியரங்கக் கவிதைகள் 'தண்டலை' என்ற பெயரில் 1966இல் வெளியாகியது. இன்பவானில்(1971), எரிமலை தந்த விடுதலை(1988), நாடும் வீடும் கவியரங்கக் கவிதைகள் (2001), ச.வே.பஞ்சாட்சரம் கவிதைகள்(2002), திறந்தவெளிச் சிறையில் ஒரு தேசம்(2017), விலங்கு, பறவை முதலான கவிதை நூல்களை இவர் எழுதி வெளியிட்டுள்ளார். இவரது பாநாடகங்கள் பஞ்சாட்சரம் பாநாடகங்கள்(2005) என்ற பெயரில் நூலாக வெளிவந்துள்ளன.

பல ஆலயங்களுக்குப் பிரபந்தங்களும் பாடியுள்ளார். இவை பல நூல்களாக வெளிவந்துள்ளன. இணுவை முருகன் பிள்ளைத்தமிழ், இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் பிள்ளைத்தமிழ், பொறிக்கடவை அம்மன் தலபுராணம், உடுப்பிட்டி மனோன்மணி அந்தாதி, கண்ணன் கவசம், தெண்டைமானாறு சந்நிதி வெண்பா, கனடா துர்க்கேஸ்வரம் அன்னை துர்க்கை அடிதொழு வெண்பா என்பன இவற்றில் குறிப்பிடத்தக்கன. திருவூஞ்சல், அம்புலித்தூது, திருவிரட்டை மணிமாலை, திருப்பள்ளியெழுச்சி, மும்மணிக்கோவை, சிந்து முதலான பிரபந்தங்களையும் பல ஆலயங்களுக்குப் பாடியுள்ளார். இவற்றில் 30 ஆலயங்களுக்குப் பாடிய பிரபந்துங்கள் நூலாகத் தொகுக்கப்பட்டு வெளியீடு காணவுள்ளது.

கீர்த்தனைகள், பக்திப் பாடல்கள் பலவற்றையும் இவர் எழுதியுள்ளார். பிரபல பாடகர்கள் உன்னிகிருஷ்ணன், மனோ, மதுபாலகிருஷ்ணன், அனுராதா ஸ்ரீராம், ஹரிஸ் ராகவேந்திரா, மாணிக்கவிநாயகம், பம்பே ஜெயஸ்ரீ முதலானோரின் குரல்களில் இவரது பாடல்கள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அத்துடன் இவரெழுதிய 50 க்கும் மேற்பட்ட தாயக விடுதலைப் பாடல்களை சாந்தன், திருமலை சந்திரன், மணிமொழி, ராதிகா சுப்பிரமணியம், தவமலர் ஆகியோர் பாடியுள்ளனர். இசைவாணர் கண்ணன் இவரது பாடல்களுக்கு இசையமைத்துள்ளாரென்பதும் குறிப்பிடத்தக்கது. இவரெழுதி தமிழீழ வானொலியில் ஒலிபரப்பாகி வந்த 'பிரபாகரப் பெருங்காப்பியம்' மூன்று பாகங்களும், 47 படலங்களும், 1300 கவிதைகளும் கொண்ட பெரும்படைப்பாகும். எனினும் அது யுத்தத்துக்குள் தொலைந்து போனமை அவருக்குப் பெரும் இழப்பாகும். மாவீரர் காவியங்களையும் இவர் பாடியுள்ளார்.

இவரது சிறுகதைகள் சின்னஞ்சிறுகதைகள்(1969), வேள்விநெருப்பு(2003), அன்னைமண்(2008), இந்தத் தீபாவளி தேவைதானா(2011), வண்டி முன்னாக மாடு பின்னாக(2012), கொம்புத்தேன்(2014) ஆகிய நூல்களாக வெளிவந்துள்ளன. இவரெழுதிய நாவல்'கூலிக்கு வந்தவன்' என்ற தலைப்பில் 2003இல் வெளியிடப்பட்டுள்ளது. சிறுவர் பாடல்களையும் இவர் எழுதியுள்ளார். இவை 'சின்னப்பாப்பா பாட்டு'(2004) என்ற தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது. இவரெழுதிய 'இலக்கணப் பூங்கா', தமிழ் கற்கும் மாணவர்களுக்குப் பெரிதும் உதவும் துணை நூலாக 15 பதிப்புகள் கண்டு இன்றும் பயன்பாட்டில் உள்ளமை முக்கியமானதாகும். சிறந்த சொற்பொழிவாளரான இவர் ஈழத்திலும், கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் சமய, இலக்கிய, அரசியல் சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார்.

மரபிலக்கியவாதிகள் நவீன உரைநடை இலக்கியங்களில் ஈடுபாடு காட்டுவதில்லை என்பதைப் பொய்யாக்கும் வகையில் புனைகதைத் துறைக்குள்ளும் தன்னை ஈடுபடுத்திய இப்பேராளுமை 84 வயதிலும் தளராத தமிழ்ப்பணியாற்றி வருகிறார். தனது தடத்தில் பல இளங்கவிஞர்களையும், பேச்சாளர்களையும் உருவாக்கிய பெருமையும், பல இலக்கிய சமய அமைப்புகளை உருவாக்கிய பெருமையும் இவரைச் சாரும். இப்பேராளுமை நூறாண்டு நிறைவாக சாரில் வாழ 'உதயன் சஞ்சீவி' வாழ்த்துகிறோம்.

1505-1948 வரை

# யாழ்ப்பாண வரலாறு

○ ந.பரமேஸ்வரன்

## 1944 ஜூலை 22

**தமிழ்க்காங்கிரஸ் உதயம்**

1944 ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சட்டசபை தமிழ் உறுப்பினர்கள் ஒன்பது பேர் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் ஒன்று கூடி தமிழ்க் காங்கிரஸ் கட்சியை ஆரம்பித்தனர்.திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். திரு.நாகநாதன் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.நடேச ஐயரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார். தமிழர்களின் சுயாட்சிக்காக உழைப்பதே தமிழ்க் காங்கிரஸின் நோக்கம் என அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.பிரித்தானிய றோயல் கமிஷன் கூட்டத்தில் கலந்து கொள்வதில்லையெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் காலப்பகுதியில் வாழ்ந்த யாழ்ப்பாண மக்கள், எங்கு துன்பம் நிகழ்ந்தாலும் உதவும் மனப்பாங்கைக் கொண்டிருந்தனர். வங்காள தேசத்தில் வெள்ளம் ஏற்பட்ட போதும், மகாத்மா காந்தியின் மனைவி கஸ்தூரிபாய் காலமானபோதும், பிரபல தமிழ் எழுத்தாளர் கு.ப.ரா.காலமான போதும் நிதி சேகரித்து அனுப்பியிருந்தனர்.

இந்தக் காலப்பகுதியில் அரசியல் திருத்தம் தொடர்பான கலந்துரையாடல்கள் பல்வேறு மட்டங்களிலும் இடம்பெற்றன.யாழ்ப்பாண முற்போக்குச் சங்கம் (Jaffna Progressive Association) இலங்கைக்கு சமஷ்டி ஆட்சி முறையே பொருத்தமானது என ஆளுநருக்கு கடிதம் அனுப்பியது.

இதேவேளை மட்டக்களப்புத் தமிழர்கள் வடமாகாணத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதேயளவு பிரதிநிதித்துவம் மட்டக்களப்புக்கும் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

## 1944 செப்ரெம்பர் 07

அரசாங்கசபையில் சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக வட்டமேசை மகாநாடு ஒன்று சிங்களத் தலைவர்களால் கூட்டப்பட்டது.இந்த மகாநாட்டில் திரு.மகாதேவா ஓர் ஆலோசனையை முன்வைத்தார். இலங்கையின் சனத்தொகை 60 இலட்சம். இதில் 40 இலட்சம் பேர்சிங்களவர்கள். இங்கைத்தமிழர்கள்.முஸ்லிம்கள்.இந்தியத்தமிழர்கள் அனைவரும் சேர்த்து 20 இலட்சம் பேர்.பறங்கியர் 20,000 பேர். ஐரோப்பியர் மூன்று அல்லது நான்காயிரம் பேர். எனவே சிங்களவருக்கு 60 ஆசனங்களும்,தமிழருக்கு 20 ஆசனங்களும்,முஸ்லிம்களுக்கு 10 ஆசனங்களும் மலையகத்தமிழர்களுக்கு 10 ஆசனங்களும் ஐரோப்பியர்களுக்கும் பறங்கியர்களுக்குமாக ஏழு,எட்டு ஆசனங்கள் ஒதுக்கப்படலாம் என்பதே மகாதேவாவின் யோசனை.S.W.R.D.பண்டாரநாயக்கா தலைமையிலேயே இந்த மகாநாடு நடைபெற்றது என்ன காரணமோ தெரியவில்லை டி.எஸ்.சேனநாயக்க இந்த மகாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.

## 1944 ஒக்ரோபர் 16

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, அரசியல் திருத்தம் தொடர்பாக கொழும்பில் ஊர்வலமொன்றை நடத்திச் சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற தமது நிலைப்பாட்டைத் தெரிவித்தது. இந்த ஊர்வலத்தில் 5000 பேர் கலந்து கொண்டனர். தொடர்ந்து கொழும்பு நகரமண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் திரு.பீற்றர் கெனமன், விக்கிரமசிங்க, திரு.வைத்திலிங்கம்,திரு. சண்முகதாசன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட பிரகடனம் வருமாறு -

புதிய அரசியல் யாப்பில் சகல சமூகத்தவரையும் உள்ளடக்கியதான பல்லினக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும், சகல சமூகத்தினருக்கும் சம அந்தஸ்து வழங்கப்படவேண்டும்.இன,மத, சாதி ரீதியான பாகுபாடுகள் குற்றவியல் குற்றமாக அறிவிக்கப்பட வேண்டும்.இலங்கையில் வசிக்கும் இந்தியர்களுக்கு இலங்கை குடியுரிமை வழங்கப்படவேண்டும்.நாடாளுமன்றத்தில் இரண்டு சபைகள் உருவாக்கப்படவேண்டும். ஒன்று, இனவாரிப் பிரதி நிதித்துவ சபையாகவும் மற்றையது தொகுதிவாரிப் பிரதிநிதித்துவ சபையாகவும் இருக்கவேண்டும்.சகல சமூகங்களினதும் தாயகப் பிரதேசங்கள்,மதவழிபாடுகள், பொருளாதார விடயங்கள், கலாசாரம் என்பன பாதுகாக்கப்பட வேண்டும். இவையே கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

## 1944 ஒக்ரோபர் 23

சிலாபம், உடப்பு தமிழ்ச்சங்கத்தின் பதினைந்தாவது ஆண்டு பொதுக்கூட்டம் 23.10.1944 அன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்கு ஜீ.ஜீ.பொன்னம்பலம் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். இந்தக்கூட்டத்தில் உரையாற்றிய ரூபசிங்கம், ஜீ.ஜீ.யின் 50:50 கோரிக்கைக்கு இலங்கையிலுள்ள தமிழர்கள் அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார். ஜீ.ஜீ.யின் கோரிக்கைக்கு தாங்கள் பூரண ஆதரவு வழங்குவதாக ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(வரலாறு தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு

யாழ். STS வைத்தியசாலை பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கான தகுந்த ஊழியர்களை எதிர்பார்க்கின்றது.

- மனிதவள முகாமையாளர்
- வைத்திய உதவியாளர் (இரவு / பகல்)
- களஞ்சிய உதவியாளர்
- மருந்தக ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்
- மருந்தக உதவியாளர்
- துப்புரவுப் பணியாளர்

கவர்ச்சிகரமான ஊதியத்துடன் மேலதிக அனுகூலங்களும் வழங்கப்படும்.
யாழ். நகரை அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் மட்டும் உங்கள் சுயவிபரக்கோவையினை வைத்தியசாலை வரவேற்பு பகுதியில் கையளிக்கவும்.

மேலதிக தொடர்புகளுக்கு: **077 120 3763**

(CS/26004)AH-1

## வேலையாள் தேவை

நல்லூரிற்கு அருகாமையிலுள்ள இலத்திரனியல் கடை ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை.

தொடர்பு: **076 373 7475**
**077 143 7475**

## கடைகள் வாடகைக்கு

யாழ். வைத்தியசாலை வீதியில் கடைகள் வாடகைக்குண்டு. அலுவலகங்களுக்கும் ஏற்றது.

**077 162 0626**

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனமொன்றுக்கு வேலையாள்கள் தேவை.

I. கணக்கு உதவியாளர்
II. சாரதி உதவியாளர்

தொடர்பு: **077 965 2001**
**077 2601850**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பான்சிக் கடையொன்றுக்கு வேலையாட்கள் தேவை. சிறிய வாகனம் (Super ACE ) ஓடத் தெரிந்தவர் தேவை. ஓடத் தெரிந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**076 682 9867**

(CS/51735)AH-1

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த (V) கோப்பாய் தெற்கு. 1993 இல் பிறந்த. சிவில் எஞ்ஜினியர். கனடா PR ஐ கொண்ட மணமகனுக்கு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம்

**077 739 1549**

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் நெடுங்குளம் சந்திக்கு அருகாமையில், A9 வீதியில் 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இல.

**076 756 1236**

## பணிப்பெண் தேவை

கொக்குவில் பகுதியில் தங்கி நின்று வேலை பார்க்க பணிப்பெண் தேவை. (உணவும், தங்குமிடமும் இலவசம்) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- **076 396 2454**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இருபாலை கிழக்கு வீதியில் கடைக் கட்டடத்துடன் கூடிய நிலப் பரப்பு 01 குளி 15.06 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:**077 1516 013**

## பகுதி நேர மற்றும் முழு நேர வேலைகள்

ராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற உங்களுக்கு ஒரு சிறந்த வேலை வாய்ப்பு. மோட்டார் சைக்கிள் மற்றும் உரிமம் வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும். யாழ்பாணம்,கிளிநொச்சி, முல்லைத்தீவு,வவுனியா, மன்னார் விசேடமானவை.

**070 259 8547**

## வேலையாள் தேவை

வவுனியா நகரத்தில் தாய் இல்லாத சிறுபெண் தனது சொந்தக்கடை நடத்துகின்றார். அவருக்கு உதவியாக ஒரு பணிப் பெண் தேவை. உணவு, தங்குமிட வசதி உள்ளது.

**070 484 5366**

## மணமகள் தேவை

01. கொக்குவில் - கோண்டாவில். இந்து. கௌரவகுலம் (V). 1992. அனுசம். ACCA (UK), BBA (Australia), BSc (Australia), LLM (UK), ASS.Director, Divorce, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
02. சங்கானை. இந்து. கௌரவகுலம் (K). 1992. விசாகம். BA(Hons), Accounting, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
03. நீர்வேலி - கந்தர்மடம். இந்து. கௌரவகுலம் (V). 1992. அவிட்டம். BEng (UK), UK Citizen, Vegetarian மணமகனுக்கு மணமகள் தேவை.
04. உடுப்பிட்டி - கரணவாய். இந்து. கௌரவகுலம் (V). 1990. அவிட்டம். BSc Engineering, Newzealand மணமகனுக்கு மணமகள் தேவை.
05. சுருவில் - வண்ணார்பண்ணை. இந்து. கௌரவகுலம் (V). அச்சுவினி. 1987. MSc, Australia மணமகனுக்கு மணமகள் தேவை.
06. புங்குடுதீவு. இந்து. கௌரவகுலம் (V). 1989. சுவாதி. MSc, Engineer கனடா மணமகனுக்கு மணமகள் தேவை.
07. நெல்லியடி. இந்து. கௌரவகுலம் (V). 1990. மகம். Bachelor of Engineering, கனடா மணமகனுக்கு மணமகள் தேவை.
08. வடலியடைப்பு. இந்து. கௌரவகுலம் (V). 1990. விசாகம். BSc, MBA, கொழும்பில் Consultant ஆக இருக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.
09. கொக்குவில். இந்து. கௌரவகுலம் (V). 1988. அனுசம். MBBS Doctor மணமகனுக்கு மணமகள் தேவை.
10. கோப்பாய் - சுன்னாகம். இந்து. கௌரவகுலம் (V). 1988. பூரட்டாதி. MBA, Financial Analyst, கனடா மணமகனுக்கு மணமகள் தேவை.
11. சண்டிலிப்பாய். இந்து. கௌரவகுலம் (V). 1989. அனுசம். B.S and Post Graduate, Human Resource Analyst, USA மணமகனுக்கு மணமகள் தேவை.
12. உடுப்பிட்டி. இந்து. கௌரவகுலம் (V). 1990. உத்திரட்டாதி. Phd (Japan), Civil Engineer, கனடா மணமகனுக்கு மணமகள் தேவை.

(CS/51687)AH-1

**Phone - 077 539 3728** **Whatsapp - 077 [illegible]**

## காணி விற்பனைக்கு

கொக்குவில் சம்பியன் வீதியில் 2 பரப்பும், கருவேற்புலம் வீதியில் 2 பரப்பும் விற்பனைக்கு.

**077 601 1135**

## நாள் வாடகைக்கு

யாழ்நகரில் சகல தளபாட சமையல் வசதிகள் கொண்ட 3 அறைகளுடன் கூடிய வீடு நாள்/ கிழமை / மாத வாடகைக்குண்டு.

**074 374 3767**

## தேவை

தரமான கிளுவங்கதியால் தேவை. விற்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 306 8982**

(CS/51716)AH-1

## காணி விற்பனைக்கு

யாழ் நல்லூர் குறொஸ் றோட்டில், இரண்டு நல்ல தண்ணீர்க் கிணத்துடன் கூடிய 11 பரப்பு (பதினொரு பரப்பு) காணி விற்பனைக்குண்டு.

மேலதிக விபரமறிய தொடர்புக்கு :
**076 8799 421**

## விற்பனைக்குண்டு

தாவடி வடக்கு மயானத்துக்குப் பின்பக்கம் எல்லா வசதியுடன் கூடிய 1 1/4 பரப்புக்காணி, வீடு விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 063 8894**

## வேலையாள் தேவை

தையல் உதவிக்கு பெண் ஒருவர் தேவை. உணவு, தங்குமிடம் கொடுக்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

கொழும்பு 14
**074 273 3372**

## விற்பனைக்கு

அங்கவீனர்கள் பாவிக்கும் மூன்று சக்கர மோட்டார் சைக்கிள் (HONDA) ஹெண்டா ஜப்பான் மற்றும் L.G. குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்குண்டு.

(CS/51715) AH-1

**077 247 4740, 077 247 4714**

## வீடு வாடகைக்குத் தேவை

வடமராட்சியில் பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்கு வீடு வாடகைக்குத் தேவை.

**077 833 4383**

## வாடகைக்கு

கொழும்பு 14 இல். Rooms வாடகைக்கு உண்டு. தனியாகவும் அல்லது குடும்பமாகவும் இருக்கக் கூடிய சிறிய Rooms வாடகைக்கு விடப்படும்.

**074 273 3372**

## வாடகைக்கு

நீர்வேலியில் 3 தொடர்கடைகள் வாடகைக்கு உண்டு.

**076 058 9822**

## வீடுகளுக்கு வந்து கற்பித்தல் குழு/ தனி வகுப்புக்கள்

ஆங்கில / தமிழ் மொழி மூலம்
ஆங்கிலம் -
சகல தரங்களுக்கும்
கணக்கீடு, புவியியல், குடியியல் -
A/L வரை
சிங்களம் - ஆரம்ப வகுப்புக்களுக்கு

**077 331 6402**

(CS/51725)AH-1

## மரண அறிவித்தல்

மலர்வு
26 • 12 • 1976



உதிர்வு
10 • 08 • 2023

**சிவஸ்ரீ ஈஸ்வரக்குருக்கள் பரமேஸ்வரன் ஐயா**
**(சின்னவன்)**

கலட்டியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ ஈஸ்வரக்குருக்கள் பரமேஸ்வரன் ஐயா கடந்த (10.08.2023) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஈஸ்வரக்குருக்கள் மற்றும் நாகபூஷணி அம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற லோகநாதக் குருக்கள் மற்றும் புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், அனுஷலாவின் அன்புக் கணவரும், பிரணிகா, பிரவின் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.08.2023) திங்கட் கிழமை ஜேர்மனியில் நடைபெறும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் அறியத் தருகின்றோம்.

**கிரியைகள் நடைபெறும் இடம்:**
Mathias - Giesen - Strobe,
11,41540 Dormagen

தகவல்:
**குடும்பத்தினர்**

(CS/51731)AH-1

[illegible] 772 3399, சுதன் - 077 614 8781, ரதி - 077 401 1151, குட்டி - 076 928 6190

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிநிலை வெற்றிடம்



**யாழ்.மாவட்ட தொழில்முயற்சியாளர்கள் தங்கள் வியாபாரத்தை குட் மார்க்கெட் உடன் அதிகரிக்க அழைக்கப்படுகிறார்கள்!**

குட்மார்க்கெட் என்பது சமூக நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், பொறுப்பான வணிகங்கள், குடிமை நிறுவனங்கள், நெட்வேர்க்குகள் மற்றும் மாற்றங்களைச் செய்பவர்களின் சமூகமாகும். குட்மார்க்கெட் சமூகம் இலங்கையிலும் 90 க்கும் மேற்பட்ட நாடுகளில் 2800க்கும் மேற்பட்ட நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

GIZ மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவுடன் குட்மார்க்கெட் வணிக முடுக்கம் மற்றும் சந்த இணைப்பு Or சந்தை குறித்த மூன்று நாள் தங்கியிருந்து பங்குபெறும் நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்ய தயாராக உள்ளது. வடமாகாணத்தில் உள்ள 30 தொழில்முனைவோர், நகர்ப்புற மற்றும் சர்வசே சந்தைகளுக்கு தமது வர்த்தகத்தை விரிவுபடுத்தத் தயாராக உள்ளனர்.

**உங்கள் அடிப்படை வணிகச் சுயவிவரத்தை info@goodmarket.lk அல்லது WhatsApp 0772764455 / 0770208642 என்ற எண்ணிற்கு ஆகஸ்ட் 28, 2023 அன்று அல்லது அதற்கு முன் அனுப்பவும்.**

**கொழும்பில் செப்டம்பர் 2 மற்றும் 3 வது வாரங்களில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்படும்.**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குலத்தைச் சேர்ந்த 1991 கேட்டை, 2ம் பாதம், கிரகபாவம் 14 1/2 இல் பிறந்த பொறியியலாளராகப் பணிபுரியும் மணமகனுக்கு சைவபோசன ( Vegetarion ) பட்டதாரி மணமகள் தேவை.

**071 424 6307**

## இணைந்த கணிதம்

A/L 2023 மாணவர்களுக்கான வினா விடை வகுப்புகள் மற்றும் A/L 2024, A/L 2025 வகுப்புகள்
(Personal and Group)
077 832 4002

## வாடகைக்கு

இல.27, ஸ்ரான்லி றோட்
யாழ்ப்பாணம்.
(கடை வாடகைக்குண்டு)
**075 803 9586**

## Angel International School

**Manipay Jaffna Chavakachcheri**

Admissions available for Classes from **3+ to A/L** for the New Academic Year 2023/2024 from 4th September 2023.

| School Location | Available Classes | Contact Number |
|---|---|---|
| Manipay | 3+ to A/L | 077 306 8997 |
| Jaffna | 3+ to Grade 6 | |
| Chavakachcheri | 3+ to Grade 6 | |

**Please call us for more information.**

**- School Administration**

## ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை

**மானிப்பாய் யாழ்ப்பாணம் சாவகச்சேரி**

**3+ தொடக்கம் உயர்தரம் வரையான 2023/24 புதிய கல்வியாண்டுக்குரிய அனுமதிகளை செப்ரெம்பர் 04, 2023 தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.**

| பாடசாலை | வகுப்புக்கள் | தொடர்பு இலக்கம் |
|---|---|---|
| மானிப்பாய் | 3+ to A/L | 077 306 8997 |
| யாழ்ப்பாணம் | 3+ to Grade 6 | |
| சாவகச்சேரி | 3+ to Grade 6 | |

**மேலதிக விபரங்களிற்கு எம்மைத் தொடர்புகொள்ளவும்.**

**- பாடசாலை நிர்வாகம்**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்










**பரமேஸ்வரன் தர்ஷனன்**

**யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 37 ஆவது பொது பட்டமளிப்பு விழாவில் 19.07.2023**

BBA (Hons) First Class Financial Management

**பகீரதன் காண்டீபன்**

**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் 24 ஆவது பொது பட்டமளிப்பு விழாவில்**

B.Sc (Hons) in Computing and information Systems

ஆகிய பட்டங்களை பெற்ற இவர்கள் மென்மேலும் பல பட்டங்களை பெற்று வாழ மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:** **செல்லையா கந்தசாமி**
**(ஓய்வுநிலை முகாமையாளர் - மக்கள் வங்கி)**
**லீலாதேவி**

(cs 25973)(N.1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில்

12 • 12 • 1981



அம்மன் அடியில்

01 • 08 • 2023

## பிரபல தவில் மேதை

# N.நந்தகுமார் (நந்தன்)

நல்ல தவில் மேதையே "நந்தன்" என
நாலுலகும் அறிந்திருக்க ; ஆற்றலினால்
உள்ளமெல்லாம் நிறைந்தவனே ! திறமை கண்டு
உனையழைத்தார் லண்டனுக்கு ! ஈலிங் அம்மன்
வெல்லமென உன் தவிலின் ஓசையில் மயங்கி
விரும்பியுனைத் தன்னோடு அணைத்தாள் தானோ?

கொட்டுதவில் ஓசையினால் கட்டிப் போடும்
கெட்டித் தனம் மிக்கவனே மணக்கும்பான் வெள்ளைப் புற்றில்
அட்டதிக்கும் அதிர நீ அடித்த அடி நந்தா!
அக்கறையாய் நாமெல்லாம் ரசித்திருப்போமே!
வெட்டி விழி திறப்பதற்குள் உந்தன் சாவு !
விம்முகிறோம் கேள்வியுற்று! "நந்தா" உனை
தட்டுதவில் கோலமுடன் காண்பதெப்போ?
எமை மறந்துன் கச்சேரி பார்ப்பதெப்போ ?

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

**புதிய நதியா**
நகைமாடம்
73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**பாலவிநாயகர்**
மோட்டேர்ஸ்
இல,08, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**சண் ரான்ஸ் போட்**
இல,153,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**கந்தவேலன்**
றேடர்ஸ்
இல,110, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**மைதிலி**
நகைமாடம்
89V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**கவிஞர்**
**வேலணையூர்**
**சுரேஷ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழி இறைச்சி 1,200 ரூபா!

கொழும்பு ஓக 20 சோளத்துக்கான இறக்குமதி வரியைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கையால் எதிர்காலத்தில் ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சியை ஆயிரத்து 200 ரூபாவுக்கு விற்பனை செய்யமுடியும் என்று கோழி இறைச்சி உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. அடுத்த இரண்டு வாரங்களுக்குள், வரிக் குறைப்புடன் சோளம் இறக்குமதி செய்யப்பட வாய்ப்புள்ளது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த நிலையிலேயே இந்தத் திட்டத்தால் எதிர்காலத்தில் ஒரு கிலோ கோழி இறைச்சியை ஆயிரத்து 200 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும் என்றும், ஒரு முட்டையை 40 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும் என கோழி இறைச்சி உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. (அ-ம)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 31ம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த (21.07.2023) வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

அமரர்

### பிறேமச்சந்திரன் லங்காதேவி (லங்கா)

அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (20.08.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசியூடாகவும் ஆறுதல் தெரிவித்த உள்நாட்டு வெளிநாட்டு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

44/6, கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி உமா நாகபாலன்

(இளைப்பாறிய வாணிப உத்தியோகத்தர் –
தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை
(திருகோணமலை, யாழ்ப்பாணம்)

தோற்றம் 14.09.1966 — மறைவு 18.08.2023

யாழ்ப்பாணம் வைமன் வீதியைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி உமா நாகபாலன் நேற்றுமுன்தினம் (18.08.2023) வெள்ளிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - சாரதாமணிதேவி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் - ஞானாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகளும், நாகேந்திரம் நாகபாலனின் (இளைப்பாறிய மானி வாசிப்பாளர், தேசிய நீர்வழங்கல் சபை - திருகோணமலை) அன்பு மனைவியும், அம்சாயினியின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சிவகுமாரன், பவானி, முகுந்தன், மாலினி, பாலகுமாரன், முருகதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.08.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3/8, கேசாவில் 1ஆம் ஒழுங்கை,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/51726) AH-1

077 892 6008, 074 053 2978

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 05 . 1932



மறைவு 19 . 08 . 2023

### திருமதி அன்னபூரணம் நாகராசா

வேலணை மேற்கு வண்ணாம்புலத்தைப் பிறப்பிடமாகவும் கூழாவடி ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னபூரணம் நாகராசா நேற்று (19.08.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - சிவகாமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகராசாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகநாதர் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லம்மா, நவரட்ணம் மற்றும் சுப்பிரமணியம் (V.T.S. சுவிஸ்), சிவபாதசுந்தரம் (பிறின்ஸ் ஹோட்டல்), காலஞ்சென்ற அருளம்பலம் மற்றும் காந்தமலர் (ஓய்வுபெற்ற உதவி திட்டமிடல் பணிப்பாளர்), காந்திமதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நித்தியசிரேன்மணி (ரதி, ஜேர்மனி), றமணி, காலஞ்சென்ற ராதா, தவராசா மற்றும் யோகராசா (பிறின்ஸ் ஹோட்டல்), றாகினி (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பால்ராஜ், அமிர்தராஜ், உதயபுத்திரன், சுமதி, கோமதி, காலஞ்சென்ற ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், மாணிக்கம், தங்கச்சியம்மா மற்றும் திலகவதி, கனகரட்ணம், சந்திரசேகரம் ஆகியோரின் மைத்துனியும், தர்சி, கஜேந்திரன், கிரிதரன், பவித்தா, அனித்தா, வினோஜா, உஷாந்தினி, தர்ஷாயினி, சைலஜன், மனோஜன், தனுசன், டினோஜன், கோகீசன், ரித்திக்கா, விந்துஜன், டுசிக்கா, மதுசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், றோசன், றோஹான், நேகா, அருண், கதிர், யஸ்வின், தன்விஹா, டிலக்ஷன், ரிஷாந், சதுர்ஷனா, மகிஸ், சமித்ரிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேலணை அம்பலவி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/26009)AH-1

STUDY IN UK
O/Levels & A/Leavels
SCHOOLING VISA
• மாணவர்களுக்கு IELTS தேவையில்லை
• 7 வேலை நாட்களுக்குள் கல்லூரி அனுமதி கடிதம்



SCHOOL ADMISSION OPEN FOR JAN. 2024
Call: 0777 761346
flex Institute
Step Towards a Bright Future
10 Years of Trusted Services
Level 12, Parkland Building
33 Park St, Colombo 2,
Sri Lanka.
www.flexinstitute.lk flexinstitute
flexinstitute flexinstitute

**வேலை ஆள் தேவை**
பொதியிடல் வேலைக்கு ஆள் தேவை
தொடர்பு : 077 623 7956
(யாழ்ப்பாணம்)

**காணி விற்பனைக்கு**
சண்டிலிப்பாயில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : 070 7013 060

**ஆண் உதவியாளர் தேவை**
றோயல் பல்சிகிச்சை நிலையத்திற்கு ஆண் உதவியாளர் தேவை
தொடர்புக்கு:
076 8788 148
074 1551 427

**காணி விற்பனைக்கு**
நல்லூர் அருகே செம்மணி வீதியில் ஒன்றாக வேலியிடப்பட்ட இரண்டு 1 பரப்பு காணித்துண்டுகள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 7791 929
076 6698 085

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## பூர்வீகப்...

குருந்தூர்மலையில் சிவாலயம் அமைப்பது தொடர்பில் யாழ்ப்பாணம் நாக விகாரையில், குருந்தூர்மலையில் அடாத்தாக அமைக்கப்பட்டுள்ள விகாரையின் விகாராதிபதி தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. சிவசேனை அமைப்பினரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு, ஆலயம் அமைக்க விகாராதிபதி அனுமதித்துவிட்டார், இதனால் பொங்கல் வழிபாடுகள் தேவையற்றவை என்பதாகக் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் கேட்டபோதே துரைராசா ரவிகரன் உதயனுக்கு இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குருந்தூர்மலை ஆதிசிவன் ஆலயத்தை வேறு ஓர் இடத்தில் அமைப்பதற்குத் தீர்மானிப்பதற்கு இந்து. பௌத்த அமைப்பினர் எனக் கூறிக்கொள்ளும் மறவன்புலவு சச்சிதானந்தம் மற்றும் பிக்குமார்களுக்கு என்ன அருகதை உள்ளது? ஆதிசிவன் ஆதிகாலம்தொட்டு அமைந்துள்ள இடத்தில் ஆலயத்தை நாங்கள் அமைப்போம். அதற்குள் அரச கைக்கூலிகள் அக்கறைப்படத் தேவையில்லை.

யாழ்ப்பாணத்தில் உள்ள நாகவிகாரையில் மறவன்புலவு சச்சிதானந்தம் உட்பட பிக்குமார் கூடி கலந்துரையாடி பௌத்தர்களும் இந்துக்களும் சேர்ந்து குருந்தூர் மலையில் புதிய சிவன் ஆலயம் அமைப்பார்கள் என்று கூறியுள்ளார். ஆதிசிவன் ஆலயத்தை அமைப்பதற்கு இவர்கள் யார்? ஆலய நிர்வாகத்தினர் என்று ஒரு தரப்பினர் இதற்காக உள்ளனர். நாங்கள் இருக்கின்றோம். இந்தநிலையில் அங்கு புதிய சிவனாலயம் அமைப்பதாகக் கூறிக்கொள்வதற்கு இவர்களுக்கு என்ன அருகதையுள்ளது?

ஆலயத்தை அமைக்க விருப்பம் என்றால் உங்கள் காணிகளில் தாராளமாக நீங்கள் அமைத்துக் கொள்ளுங்கள். ஆதிசிவனின் பூர்வீக இடத்தில் அல்லாமல் பிறிதொரு இடத்தில் ஆலயத்தை அமைத்து வரலாற்றை மடைமாற்றும் கபடத்தனம்தான் இந்தக் கலந்துரையாடலின் பின்னணியில் உள்ளது அல்லது பொங்கலைக் குழப்புவதற்கான திட்டமாகவும் இது இருக்கலாம்.

தமிழர்களின் தொன்மைகளை நீர்த்துப் போகச் செய்யும் சச்சிதானந்தமும் பிக்குவும் தேசப்பற்றுள்ள பல்லாயிரம் மக்களின் கோபத்துக்கு ஆளாகப்போகின்றனர். குருந்தூர்மலையில் ஆதிசிவனுக்கு எப்போது ஆலயம் அமைப்பது? எங்கு அமைப்பது? எவ்வாறு அமைப்பது? எல்லாம் எங்களுக்குத் தெரியும். பொங்கல் நிகழ்வுகளுக்கே தடைபோடும் நீங்கள் அதனைத் தீர்மானிக்காதீர்கள். போர்க் குற்றம் புரிந்த அரசாங்கமே போர்க்குற்றங்களை விசாரிப்பதுபோன்றுதான், ஆதிசிவனை அழிக்க நிற்கும் இவர்கள் ஆதிசிவனுக்கு ஆலயம் அமைக்கும் திட்டமாகும் - என்றார். (அ-ம-26)

## செம்மணியில்...

அவருடைய மனைவி படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், செம்மணி வளைவுப் பகுதியில் நேற்றுக்காலை இந்த விபத்து சம்பவித்துள்ளது. விபத்தில், கொக்குவில் கிழக்கைச்சேர்ந்த புவனேஸ்வரன் மனோஜ் (வயது-31) என்ற குடும்பத்தலைவரே உயிரிழந்தார். அவரது மனைவி படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-26,125,27,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடற்புலிகள்...

விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படை முகாமொன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆரம்பத்தில் எங்களுக்கு கடல்சார்ந்த அச்சுறுத்தல்கள் இருக்கவில்லை. இந்து சமுத்திரம் முழுவதுமாக பிரிட்டிஷ் கடற்படையின் கட்டுப்பாட்டில் இருந்தது. அந்தக் கடற்படை இந்து சமுத்திரத்தை விட்டு வெளியேறிய பிறகு எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. ஆனால், 1983க்குப் பிறகு நாம் ஒரு போரை எதிர்கொள்ள நேரிட்டது. அன்று கடற்புலிகள் அமைப்புப் படகுகள் மூலம் தனது திறமையை வெளிப்படுத்தியது. கடல் அவர்களுக்குப் புதிய அனுபவமாக இருக்கவில்லை. ஆனால், எங்களுக்குக் கடலைப்பற்றிக் கற்க வேண்டியிருந்தது. சில காலத்துக்குப் பிறகு, எமது பாதுகாப்புப் படைகளின் அர்ப்பணிப்பும் திறனும் காரணமாக கடற்புலிகள் அமைப்பை ஒழிக்க முடிந்தது. எமது கடற்படைக்கு இத்தகைய போர்களைச்செய்யத்திறமையிருப்பதாக அங்கீகாரம் கிடைத்தது.

சோமாலியாவில் இத்தகைய குழுக்களைக் கட்டுப்படுத்த, உலகின் பல பிரதான கடற்படைகள் தேவைப்பட்டன. ஆனால், இதை எங்களால் தனியாகச் செய்யமுடிந்தது. போர் நிறைவடைந்து தற்போது 14 வருடங்கள் கடந்துள்ளன. இப்போது நாம் நிகழ்காலம் குறித்தும் எதிர்காலம் பற்றியும் கவனம் செலுத்த வேண்டும்.

இன்று, டோனர் போன்ற பல நவீன தொழில்நுட்பச் சாதனங்கள் உள்ளன. இந்து சமுத்திரத்தில் நீர்மூழ்கிக் கப்பல்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. எனவே, எமது கடல் பாதுகாப்புக்காக, நீர்மூழ்கிக் கப்பல்களைக் கட்டுப்படுத்தும் திட்டத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்தவேண்டும். மேலும், விமானங்கள் மற்றும் டோனர்கள் எதிர்காலத்தில் எவ்வாறு பயன்படுத்தப்படும் என்று எம்மால் கூறமுடியாது. இன்றையகாலத்தை விட எதிர்காலத்தில் அதிக தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட வேண்டியிருக்கும் - என்றார்.

(அ-ம)

## தேசியப்...

அனைத்துக் காரணிகள் குறித்தும் கவனம் செலுத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இலங்கைக் கடற்படை முகாமொன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் வைத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய சவால்களை ஆயுதங்களால் மாத்திரம் கட்டுப்படுத்த முடியாது. அவற்றை எதிர்கொள்ளும் வகையில் உயர்திறன்கள் மற்றும் நவீன தொழில்நுட்ப அறிவு கொண்ட பாதுகாப்புப்படையைக் கட்டியெழுப்ப வேண்டும். தேசியப் பாதுகாப்புத் தொடர்பில் விரைவில் மறுபரிசீலனை மேற்கொள்ளப்படவுள்ளது. உலக வல்லரசுகளின் போராட்டம் இந்து சமுத்திரத்தில் மையம் கொண்டுள்ளதால் அதனை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. ஒருபுறம், பசுபிக் சமுத்திரத்தில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே அதிகாரப் போட்டி உள்ளது. மறுபுறம், உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையே அதிகாரப் போட்டி உள்ளது. அந்த அதிகாரப் போராட்டமானது எமது இராணுவம் பணியாற்றும் மாலி நாட்டின் அண்டை நாடான ஆபிரிக்காவின் நைஜர் நாட்டையும் எட்டியுள்ளது. உலகின் மிக முக்கியமான வர்த்தகப்பாதை இந்து சமுத்திரத்தில்தான் அமைந்துள்ளது. இலங்கை அதில் ஒரு பிரதானமான இடத்தை வகிக்கிறது. இந்த அதிகாரப் போட்டியில் சிக்கிக் கொள்ளாமல், பக்கச் சார்பின்றி முன்னேறவேண்டும். அங்கு எமது பாதுகாப்புத் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும்.

பல நாடுகள் உள்நாட்டு அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன. குறிப்பாக உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் போன்ற உள்நாட்டு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. இதற்கு நாமும் தயாராகவேண்டும். இன்று நாம் உலக அரசியலில் தொடர்புபட்டுள்ளோம். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அதைப்பற்றிச் சிந்திக்கவேண்டும். அவ்வாறானால், எமது நாட்டின் எதிர்கால தேசியப் பாதுகாப்பு குறித்து மீளாய்வு செய்ய நான் எதிர்பார்க்கிறேன்.

ஐரோப்பாவில் உள்ள ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு ஐந்து அல்லது பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை இத்தகைய மீளாய்வைச் செய்து வருகின்றன. நாட்டுக்கு எத்தகைய அச்சுறுத்தல்கள் உள்ளன? நாட்டின் வளங்கள் என்ன? அவற்றை எவ்வாறு செயற்படுத்தவேண்டும் என்பது குறித்து அவர்கள் மீளாய்வு நடத்துகின்றனர். அதற்கேற்ப அவர்களது இராணுவப் பலத்தையும் பொருளாதாரப் பலத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து முடிவுகள் எடுக்கப்படுகின்றன. நாமும் அது குறித்துக் கவனம் செலுத்தவேண்டும் - என்றுள்ளது.

(அ-ம)


## நிறுவனங்களுக்கான கணக்குகளைத் தயாரித்தல்

சகலவிதமான நிறுவனத்திற்கான கணக்குகளை தயாரித்தல், நிறுவனத்திற்கான சகலவிதமான கணக்குப் பதிவியல், அறிக்கைகளை தயாரித்தல், சந்தேகமான கணக்குகளை ஆராய்தல் வரி தொடர்பான ஆவணங்களைத் தயாரித்தல் போன்ற தேவைகளை தரமான முறையில் நிபுணத்துவம் பெற்றவர்களால் செய்து தரப்படும்.

076 776 3517

shanmuganathans1051940@gmail.com

## வேலைவாய்ப்பு



1. Welder (வெல்டர்)
2. Technician (தொழில்நுட்பவியலாளர்)

மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களுக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் கீழ்வரும் முகவரிக்கு நேரில் வந்து அல்லது தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளவும்.

இல.105, இராஜ வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

077 8389 309

## இலவச ஆங்கில கணினி வகுப்புகள்
### பிரிவு - 49

ஆரம்பம் 26,27/8/2023 10 AM

(1).Diploma கற்கைகள்
- Diploma in English / Spoken English
- Diploma in ICT / AI
- Diploma in Singalam
- Diploma in Psychology & Counselling
- Diploma in Caregiver

(2).Consultancy Services:
Canada, UK, Australia, Rumania போன்ற நாடுகளுக்கான Visit Visa / Student Visa ஆலோசனைகள். நீண்ட கால அனுபவம் பெற்ற Consultant ஆல் வழங்கப்படுகின்றன.

(3).Dimploma in Cosmetology:(50% Discount for New Batch)
Skin care treatment, Nailart, Grooming, Hygiene, Massaging, Manicure & Pedicure, Hair Styling & SPA துறையில் அனுபவம் பெற்ற விரிவுரையாளர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

IPS Thirunelvely, Jaffna.
T.P: 021 4340 2257 / 078 685 2529.

(CS 26020) A-1


## மரண அறிவித்தல்



### திருமதி பரமேஸ்வரி தெய்வேந்திரம்

மண்ணில் 26.04.1939 — விண்ணில் 16.08.2023

உடுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி தெய்வேந்திரம் கடந்த (16.08.2023) புதன்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - கண்மணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.திருமதி தில்லையம்பலம் அவர்களின் அன்பு மருமகளும், தெய்வேந்திரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சசிகரன் (கண்ணன்), சுதாகரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பவானி (சுவிஸ்), சிவகுமாரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரசன், சாருஜன், சபீனா, சசி, சமீரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற இராசமணி, சரஸ்வதி, பாலசிங்கம், பவளரத்தினம், மருதலிங்கம், சோதிமணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கதிரிப்பிள்ளை, சிதம்பரலிங்கம், சொர்ணமலர், முத்துலிங்கம், சறோஜினிதேவி, ஸ்ரீபாலசந்திரன், யோகேஸ்வரி, தேவதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மகாலக்ஷ்மி (சந்திரா) யின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/26005)AH-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 06 . 1932 — மறைவு 17 . 08 . 2023



### சின்னத்துரை சுப்பிரமணியம் (சல்லாரியார்)

நெடுந்தீவு கிழக்கு, 12ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 187/25, யூனியன் லேன், வைத்தியசாலை வீதியை வதிவிடமாகவம் கொண்ட சின்னத்துரை சுப்பிரமணியம் (சல்லாரியார்) கடந்த (17.08.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற வைரமுத்து பத்தினிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், நல்லம்மா (கௌரி) அவர்களின் ஆருயிர் கணவரும், கவிதா, காஞ்சனா, சாரதா, தர்சினி, சாய்ரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவநாதன், செந்தில்செல்வம், ஜெகன், சுதர்சன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, செல்லம்மா, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பரராசசிங்கம், தருமரத்தினம் மற்றும் தனலட்சுமி, தர்மராசா ஆகியோரின் தாய் மாமனும், நடராசா, சுந்தரம்பிள்ளை, துரைராசா, ஜெயலட்சுமி, திலகவதி, வன்னிய சிங்கம், முத்துராணி, லீலாவதி, கேதீஸ்வரன், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் தங்கேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், பிரணவி, பிரணவன், பிரியங்கா, தருணி, சஞ்சய், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணா, கண்ணா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25976) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்தந்தை ஜெயசீலன் அடிகளார் குருத்துவத்தில் இன்று வெள்ளிவிழா



யாழ்ப்பாணம், ஓக. 20

அருட்தந்தை அமிர்தநாதர் பிரான்ஸிஸ் ஜெயசீலன் அடிகளார், இன்றையதினம் தனது குருத்துவ வாழ்வில் வெள்ளி விழாவைக் காண்கின்றார்.

அருட்தந்தை ஜெயசீலன் அடிகளார் 1969ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி பிறந்தார். தனது பாடசாலைக் கல்வியை சில்லாலை றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும், இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரியிலும் பயின்றார்.

யாழ்ப்பாணம் அருள் ஆச்சிரமத்தில் (குருமட வாழ்வு) 1986ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி நுழைந்தார். பின்னர் இந்தியா சென்று படிப்பைத் தொடர்ந்தார். 1998ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி அப்போதைய ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

இலங்கையில் சிறிதுகாலம் குருத்துவ வாழ்வை மேற்கொண்ட பின்னர், மேற்படிப்புக்காகக் கனடா சென்று அங்கும் பின்னர் அமெரிக்காவிலும் செபமாலைதாசர் சபையை பலப்படுத்தினார். பின்பு இரண்டு தடவைகள் மாகாண அதிபராகத் தெரிவுசெய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ம)

## தூவானம்...

திரையிடல், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முற்றத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதன்மூலம் ஈழத்துத் தமிழ்த் திரைப்பட வரலாற்றில், ஒரு திரைப்படம் 100 திரையிடல்களைக் காணும் முதலாவது சந்தர்ப்பமாக இது பதிவாகவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இன்று மாலை 4 மணியளவில் பாரம்பரிய உணவுத் திருவிழாவும், கலைஞர் கௌரவிப்பும், கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. இதன் தொடர்ச்சியாகவே தூவனம் திரைப்படத்தின் நூறாவது சாதனைத்திரையிடல் இடம்பெறவுள்ளது.

ஆர்வமுள்ள எவரும் இலவசமாக இந்தத் திரையிடலைப் பார்வையிடமுடியும்.

மருத்துவர் சிவன் சுதனின் தயாரிப்பில், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் க.ரதித [illegible]னின் இயக்கத்தில் இந்தத் திரைப்படம் வெளியாகி, பலரதும் பாராட்டுதல்களைப் பெற்று நூறாவது திரையிடலையும் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## சஜித்...

லானஐக்கியமக்கள்சக்தியுடன்இணைந்து புதியதொரு கூட்டணி அமைப்பதற்கான முயற்சியில் டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை ஈடுபட்டுவருகின்றது.

இந்தக் கூட்டணிக்கான ஆரம்பகட்ட நகர்வுகள் வெற்றியளித்துள்ளன என்று அறியமுடிகின்றது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்தே கூட்டணிக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன. விமல் வீரவன்ஸ தலைமையிலான தரப்பையும் இந்தக்கூட்டணியில் இணைத்துக்கொள்வதற்கான முயற்சிகள் இடம்பெற்றுவருகின்றன. தமிழ் முற்போக்குக் கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் பங்காளிக்கட்சிகளாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம,44)

## அடுத்த...

பிரதான தேர்தல் ஒன்று இடம்பெறும் என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அடுத்த வருடம் நிச்சயமாக பிரதான தேர்தல் ஒன்று இடம்பெறும். பொதுத்தேர்தல் ஒன்றையோ அல்லது ஜனாதிபதித் தேர்தல் ஒன்றையோ எதிர்நோக்க வேண்டி ஏற்படும். அரசமைப்பின்படிநாட்டில்பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறவேண்டும். அதிலிருந்து எவராலும் விடுபடமுடியாது. அந்தத் தேர்தல் நடைபெறும் வரையிலாவது குறுகிய அரசியல் இலாபங்களை மறந்து நாம் அனைவரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள நாட்டுக்காக ஒன்றிணைந்து பயணிக்கவேண்டும். இந்த நாட்டை மீட்பதற்கான திட்டமொன்றை வகுக்க வேண்டும் - என்றார். (அ-ம)

## குடும்பத்தலைவர்...

குடும்பத்தலைவர் ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். ரவீந்திரராசா ரசித்தன் (வயது-34) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மானிப்பாயிலுள்ள உணவகம் ஒன்றில் உணவருந்திய பின்னர் அவர் சோடாவை அருந்திவிட்டு திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார். அவரை உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசென்றபோதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இறப்புக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. மரண விசாரணைகளை வலிகாமம் கிழக்குப் பகுதியின் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)


**பெண் வேலையாட்கள் தேவை**

கிளிநொச்சி நகரில் உள்ள கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் பராமரிப்புப் பொருள்கள் அத்தோடு சிறுவர்களுக்கான ஆடைகள் மற்றும் விளையாட்டு பொருள்கள் விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

வேலை நேரம்: 8.30 - am to 7.00 pm

கந்தசாமிகோயிலுக்கு அருகாமையில்
A9 றோட், கிளிநொச்சி.

(cs.26008) (N.1)

**077 870 2188**

**பணியாளர் தேவை**

கிளிநொச்சியில் இயங்கும் குரு ஹாட்வெயார் நிறுவனத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் பணியாளர்கள் தேவை.

1. மனேஜர் - Lanka Tile Showroom - ஆண், சிங்களம், ஆங்கிலம் தெரிந்தவர்.
2. Lanka Tile விற்பனையாளர் - ஆண்
3. விற்பனை பிரதிநிதி சீமெந்து - ஆண்
4. கணக்குப்பதிவாளர் - ஆண் / பெண்

மேற்படி பணிகளுக்கு ஆட்கள் தேவை.
தங்களின் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தரவும்.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: குரு ஹாட்வெயார்
இல. 175, கரடிபோக்குச் சந்தி - கிளிநொச்சி.
**0777 435 265**

குறிப்பு:
பல்கலைக்கழக பட்டப்படிப்பு முடித்தவர்களும் விரும்பத்தக்கது.
நிறுவனத்தில் இருந்து 5 km சுற்றவுள்ள தூரத்தில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

(CR 40437) A-1

**A/L Online Classes**
Biology, Chemistry
**077 807 5566**

**வேலையாட்கள் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் நிறுவனமொன்றுக்கு அலுவலகப் பணியாளர்கள் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்) (CS/51724) AH-1

**077 830 8360, 076 776 8444**

**வேலையாள் தேவை**

எமது கால்நடை உற்பத்தி விற்பனை நிலையத்திற்கு ஆண் வேலையாள் Light Veichcle License, Auto உட்பட உள்ளவர் தேவை.

**JAFFNA EGG CENTRE**
**075 258 9665, 077 851 1265**

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

கொழும்பில் வசிக்கும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த தமிழ்க் குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கி நின்று வீட்டு பணி வேலைகள் செய்வதற்கு நன்நடத்தையுள்ள பணிப்பெண் தேவைப்படுகின்றார். உணவு, தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும். அத்துடன் தகுந்த சம்பளம் வழங்கப்படும்

தொடர்பு:- **077 3866 250**

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் புத்தூரில் **08 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு.

* **நிலப்பரப்பு**
* மெயின் றோட் முகப்புடன் காபற் வீதி.
* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1 km மீற்றர் தூரம்.
* நான்கு நான்கு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* ஒரு பரப்பின் விலை ஐந்து லட்சம் (500,000/=)
* பின்பக்கம் உள்ள காணி 1 பரப்பு இரண்டு லட்சத்து ஐம்பது ஆயிரம் (250,000/=) மட்டும்
* நல்ல சூழலில் நன்னீர் ஊற்று.

(CS 25983) A-1

தொடர்பு: **076 057 0354, 076 8260 354**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் **நுணாவில் பகுதியில்**
**6 பரப்புக் காணி** விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- நுணாவில் மேற்கு சாவகச்சேரி வேதாக்கன்னி கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் 14 லட்சமும் 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் 12 லட்சம் வரையும் உள்ளது.
- **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

**தொடர்புகளுக்கு - ஜெயம்**

**077 8147 389**
**077 9865 457**

(CS 25996) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org